ஹரி: ஓம்!



# ஞானச்சிதறல்

## தமிழ்க்கவிதையாய்

ஸ்ரீமத் பகவத்கீதை சாரம்

( 18 அத்தியாயங்களும் )


இயற்றியவர்


ஆச்சார்ய ஸ்வாமி கிருஷ்ணாத்மாநந்த ஸரஸ்வதி

# குருபரம்பரா

# GURUPARAMPARA



## பூஜ்ய குருதேவ்
## ஸ்வாமி சின்மயானந்த மகாராஜ்



**08-05-1916 to 03-08-1993**

# ஹரி: ஓம்!

## குருஜி

## ஸ்வாமி தேஜோமயானந்தாஜி

## சின்மய மிஷன்



ॐ

**Dear Krishnatmananda,**

Hari Om!

I am glad that you have completed the project of the Geeta as Tamizh songs. Congratulations!

With Love & Om,

**Tejomayananda**

Copy Rights Reserved.

Jnana Sitharal / ஞானச் சிதறல்

தமிழ்க்கவிதையாய்

ஸ்ரீமத் பகவத்கீதை சாரம்

(18 அத்தியாயங்களும்)

தமிழில் பாடல்களாய் இயற்றியவர்

ஆச்சார்யர் ஸ்வாமி கிருஷ்ணாத்மாநந்த ஸரஸ்வதி

Print Type : Printed Book / E-Book in PDF format

First Edition : June 2016 (Printed Book)

Revised Edition: May 2025 (E-Book in PDF format)

For Suggestions and Corrections,

Please email to: Shri. K.Balachandran

omsivakbc@yahoo.co.in

# சமர்ப்பணம்

புண்யமும் ஆனந்தமும்
கீதையின் சொற்கள்
அனைத்தும் வாசுதேவன்
வாயிலிருந்து மடைதிறந்த
வெள்ளம்போல் பெருகியதே.

தருமம்தனைக் காத்திடவும்
தர்மியினை காத்திடவும்,
தன்மாயையை தானடக்கி
தரணியில் அவதரித்து
பசுவிற்குக் கன்றுபோல்

பார்த்தனை நிமித்தமாய்
முன்வைத்து மறைநூலை
முழுமையாய்க் கறந்தே
பகவத்கீதை எனும்சாறை
அறியாமை அழிந்திடவே

உயிர்கள் வாழ்ந்திடவே
உலகினைக் காத்திடவே
அன்புடனே அர்ஜுனனுக்கு
மனத்தூய்மை பெறவேண்டி
**கர்மயோகம்** தனைபோதித்து

# ஞானச்சிதறல்

மனங்குவிந்து நல்குணம்
வளர்ந்திட உபதேசமாம்
**உபாசனையை** வழங்கியே,
தூயசத்துவம் படர்ந்திட
முக்குணம் கடந்திட

பார்த்தனுக்கு அம்மூன்றின்
அறிவையும் அளித்தே
**ஆன்மஅறிவு** பெறவே
நிர்குண **கைவல்யத்தை**
நிச்சயித்து அறிவாலே
அறிந்திட அருளினாரே!

ஞானசாரத்தை ஞானயோகமாய்
ஞானத்தில் உழன்றவாறே
ஞானவடிவாய் இருந்தவாறே
ஞானோபதேசம் செய்தாரே!

கண்ணன் அருளிய
ஞானஉப தேசம்தனை
நாமெல்லாம் பருகிட
அமிழ்தெனும் தமிழிலே
எளிமையாய் கவிதையாய்
**ஞானச்சிதறல் எனுமிதை**
இயற்றித் தந்திடவே
எம்மையோர் கருவியாக்கிய,

# ஞானச்சிதறல்

இறைக்கும் குருவிற்கும்
உள்ளிருந்து உதவிய
தவத்திரு ஆச்சார்யர்
வாகீசர் அவருக்கும்,

சரீரமிதை அருளிய
அன்னைக்கும் தந்தைக்கும்
அவர்தமை நினைந்தே
என்றென்றும் நன்றியுடன்,

அவர்கள் அருளால்
அவர்கள் பாதத்தில்
**“ஞானச் சிதறல்”**
எனும் இந்நூலை
அன்புடன் பணிவுடன்
சமர்ப்பிக் கின்றோம்.

**ஞானச் சிதறலுக்கு**
உருவம் கொடுத்து
உணர்வும் கொடுத்து
உதவிய இருவர்
உமாசுதன்[1] அவர்க்கும்
திருமலைவாசன்[2] அவர்க்கும்

(1 பாலசந்திரன்
2 வெங்கடாத்ரி)

# ஞானச்சிதறல்

உலகின் நாயகன்
உளம்மலர்ந்து அருளிட
உவகையுடன் நன்றியை
உலகம் உள்ளவரை
உன்னதமாய் நோயின்றி
வாழ்ந்திட வாழ்த்துகின்றோம்.



**நாராயண! நாராயண!! நாராயண!!!**

ஆச்சார்ய ஸ்வாமி கிருஷ்ணாத்மாநந்த ஸரஸ்வதி

# ஞானச்சிதறல்

## அணிந்துரை

ஸ்ரீமத் பகவத்கீதையின் மையக்கருத்தான வாழ்வியல் ஆத்மதத்துவ வேதாந்த சாரத்தை, மிகவும் சுலபமாய் புரிந்துகொள்ள எளிய நடையில் தமிழ்க் கவிதையாய் **“ஞானச்சிதறல்”** எனும் புத்தகமாய் வெளிக் கொணர்ந்துள்ள ஆச்சார்யர் ஸ்வாமி கிருஷ்ணாத்மாநந்த ஸரஸ்வதி அவர்கள், 1997-ம் வருடம் கோவை சாயிபாபா காலனியிலமைந்த ஒரு பள்ளியில் “கீதையைத் தொடர் வகுப்புகளாக” இருமாதங்களுக்கு ஒரு வாரம் - ஒரு அத்தியாயம் என்ற முறையில் போதித்து வந்தார். அதில் கலந்துகொண்டு கீதையை முறையாகக் கற்கவும், பின்னர் அவரின் மாணவனாக ஆகும் பாக்கியம் கிடைத்தது. அச்சமயத்திலிருந்து ஆச்சார்யராக எனக்கு வழிகாட்டி வருகின்றார்.

பின்னர் அவர் மே 2015ல், ஓர்நாள் எனை அழைத்து, குருதேவர் ஸ்வாமி சின்மயானந்தர் அவர்களின் நூற்றாண்டு [1916-2016] விழா கொண்டாட்டத்தின் அங்கமாக, சேலம் சின்மய மிஷனில், **“இல்லந்தோறும் கீதை”** என்ற மஹாஞான வேள்வியில், ஸ்ரீமத் பகவத்கீதையைத் தமிழில், சின்மய இயக்கத்தைச் சேர்ந்த இருபதுக்கும் மேற்பட்ட ஆச்சார்யர்களின் ஒத்துழைப்புடன், தினந்தோறும் பூஜ்யகுருதேவரின் பாதுகா பூஜையுடன் ஒரு இல்லத்தில் கீதையின் இரு பாடல்கள் என 365 இல்லங்களில் 365 நாள்களில் சத்சங்கம் மூலமாக விளக்க இருப்பதாகத் தெரிவித்தார். குறுந்தகட்டில் பதிவுசெய்த அக்கீதை விளக்கங்களை கேட்டுவிட்டு,

# ஞானச்சிதறல்

இரு ஶ்லோகத்திற்கு ஒரு பக்கம் என்ற அளவில் தொகுத்துத் தரப் பணித்தது எனக்குப் பேராச்சர்யத்தையும், மகிழ்ச்சியையும் தந்தது. இச்சிறுபணி ஜுன் 2016ல் நிறைவுற்றது. அது **நூற்றாண்டு விழா மலராக** வெளியிடப்பட்டது. இது எனது வாழ்நாள் சாதனையாக அமைந்தது, இவ்வாறுதான், என் ஆன்மீகச்சாதனை பணியானது, அவர் அனுக்கிரகத்தால் மேலும் விரிவடைந்தது.

இவ்விழாவின் நிறைவு சமயத்தில், விழாமலரில் உள்ள **ஸ்ரீமத் பகவத்கீதையின் ஒவ்வொரு அத்தியா-யத்தின் சுருக்கத்தையும் தமிழ்க்கவிதையாய் இயற்றி-யளித்தால் சாதகர்களுக்குப் பயனுள்ளதாக அமையும் என்று தெரிவித்தோம்.** உடனே அன்றிரவே அவரும் சொல்லச் சொல்ல, நான் அதை எழுதினேன். பின்னர், அதுவே **"ஞானச்சிதறல்"** என்ற சிறுநூலாக அந்நூற்-றாண்டு விழாமலருடன் வெளியிடப்பட்டது. அதை அவர் சுமார் ஆறு மணி நேரத்திற்குள் இயற்றினார் என்பது மிகவும் ஆச்சர்யமான விஷயம்.

## ஞானச்சிதறல் இரண்டாம் பதிப்பு

மேமாதம் 2016ல் வெளியிடப்பட்ட "ஞானச்சிதறல்" நூலை பிழைதிருத்தியும், சீரமைத்தும், ஸ்ரீமத் பகவத்-கீதையின் முழுச்சாரத்தையும் உள்ளடங்குமாறு, மேலும் கருத்துக்களைச் சேர்த்தும் புதுவடிவம் அளித்து இரண்டாம் பதிப்பாக E-Bookகாக வெளிவந்ததில் பெருமகிழ்ச்சி அடை கிறோம்.

# ஞானச்சிதறல்

இந்நூலின் சிறப்பு அம்சங்களாக நான் கருதுவதை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்:

- இக்கீதையின் தமிழ்க்கவிதைகள் ஆதிசங்கரர் எழுதிய கீதை பாஷ்யத்தின் கருத்துக்களின் சாரமாக பிரதிபலித்திருப்பது ஓர் விசேஷம்.

- ஸ்ரீமத் பகவத்கீதையின் ஸம்ஸ்கிருத மூலப்பாடல்களின் சாரம் தமிழ்க்கவிதையாய் மிக அழகாகவும் – ஆழமாகவும், அதே சமயம் மிகவும் எளிய தமிழ் நடையுடன் கூடியதாகவும் அமைந்திருப்பது இதன் அதிசிறப்பு அம்சம்,

- ஒருவர் மூல ஶ்லோகத்தை ஸம்ஸ்கிருதத்தில் படித்திராவிட்டாலும், இத்தமிழ்க்கவிதைகளை மட்டும் படித்தாலே, நிச்சயம் தெளிவாக கீதையின் சாரத்தை எளிதில் அறிந்து கொள்ளவும் புரிந்து கொள்ளவும் இயலும் என்றால் அது மிகையாகாது.

- ஸ்ரீமத் பகவத்கீதையின் 18 அத்தியாயங்களையும் முறைப் படி கற்றவர்கள், இரத்தினச்சுருக்கமாய் சுமார் 160 பக்கங்களில் அமைந்துள்ள இந்த **ஞானச்சிதறல்** எனும் நூலில் 6 முதல் 9 பக்கங்களைக் கொண்ட ஒவ்வொரு அத்தியாயங்களையும் நன்கு மீண்டும் மீண்டும் படித்து, தனது **மனனத்திற்கும், அதன்மூலம் சந்தேகங்கள் நன்கு தெளிந்த பின்னர், வேதாந்த தியானத்திற்குத் [நிதித்தியாசனம்] தேவையான ஸஜாதீய விருத்திகளாக** உபயோகித்துக் கொள்ள

முடியுமென்பது மிகப்பெரிய உண்மை. இவ்விதம் கீதையின் கருத்துக்களில் ஆழ்வதற்கும், சிறுபணியாற்று – வதற்கும் வாய்ப்பளித்த ஆச்சார்யர் அவர்களுக்கு என் நன்றியை சமர்ப்பிக்கிறேன். இந்நூலைத் தட்டெழுத்துச் செய்தபின், ஆச்சார்யர் மற்றும் தமிழ்ப்புலவர் ஸ்ரீகிருஷ்ண –சர்மா, சேலம் ஆகியோரின் துணையுடன் எழுத்து / கருத்துப் பிழைகள் சரி செய்யப்பட்டன.

இந்நூலை வாசிக்கும் அன்பர்களின் பார்வையில் சொற்பிழைகள் / கருத்துப்பிழைகள் / அச்சுப்பிழைகள் தென்படின் omsivakbc@yahoo.co.in என்ற எனது மின்னஞ்சலுக்கு [இ-மெயிலுக்கு] அனுப்பி புத்தகத்தை மேலும் சீரமைக்க உதவுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

## ஆச்சார்யர் இயற்றி வெளிவந்த மற்றொரு நூல்

**“பகவான் ஸம்ஸ்கிருதத்தில் அருளிய ஸ்ரீமத் பகவத்கீதை பாடல்களின் தமிழாக்கம்” – 701 பாடல்-களையும் உள்ளடக்கிய ஓர் முழுமையான தமிழ்நூல் – “அமைதியும் ஆனந்தமும்”.**

இவ்வாறு “ஞானச்சிதறலின்” முதல் பதிப்பு 2016ல் வெளிவந்த பிறகு, “இதை ஏன் மேலும் விரிவாக்கி கீதையின் **அனைத்துச் ஶ்லோகங்களையும் தமிழில் பாடல்களாக இயற்றக்கூடாது!”** என்ற எண்ணம்

அவரிடம் எழுந்தது. அதன்பின், அவர் “தினமும் ஐந்து பாடல்களை இயற்றுவேன்” என்று **2017** நவம்பர் மாதத்தில் இவ்விதம் சங்கல்பம் செய்துகொண்டு, **கீதையின் ஸம்ஸ்கிருத மூல ய்லோகத்தின் ஒவ்வொரு வார்த்தையின் பொருளும் வெளிப்படும் விதத்தில் தமிழ்ப்பாடல்களாக** அமைக்க விரும்பி, கோர்வையாகவும், அதேசமயம் அழகாகவும் அமைய வேண்டும் என்று பகவான் ஸ்ரீகிருஷ்ணரை வேண்டித் தமிழ்ப்பாடல்களாக இயற்றத் துவங்கினார். அதை அவ்வப்பொழுது அவர் எனக்குக் கைபேசி மூலம் பகிர, நான் கணினியில் தட்டெழுத்து செய்து வந்தேன்.

**இவ்வாறு, ஸ்ரீமத் பகவத் கீதையின் 701 ஸம்ஸ்கிருத ய்லோகங்களும் தமிழ்ப்பாடல்களாக ஒரு வருடத்தில் உருப்பெற்று “அமைதியும் ஆனந்தமும்” எனும் தமிழ் புத்தகமாக 2023**ல் [E-Bookகாக] வெளிவந்துவிட்டது என்பது இரட்டிப்பு மகிழ்ச்சியைத் தரும் விஷயம்.

அவரின்இச்சங்கல்பங்கள் இன்று இரு புத்தகங்களாக உருவெடுத்தது, ஆன்மீக சாதனையாளர்களுக்குக் கிடைத்த மிகப்பெரிய வரப்பிரசாதம் என்று கருதுகிறோம்.

**ஓம்நமசிவாய**

முனைவர் கி. பாலசந்திரன்

சென்னை துணைப் பொதுமேலாளர் (ஓய்வு)

22-05-2025 இந்தியன் வங்கி

# ஞானச்சிதறல்


| அத். எண் | பொருளடக்கம் | பக்கம் | பாடல்கள் |
|---|---|---|---|
| | சமர்ப்பணம் | i | |
| | அணிந்துரை | v | |
| 1 | அர்ஜுனனிடம் துக்கத்தின் வெளிப்பாடு<br>அர்ஜுன விஷாத யோகம் | 1 | 17 |
| 2 | தத்துவ ஞானத்தைப் பெறுதல்<br>ஸாங்கிய யோகம் | 6 | 39 |
| 3 | செயலை செயல்யோகமாக்குதல்<br>கர்ம யோகம் | 16 | 41 |
| 4 | அறிவால்செயலை விலக்கிஅறிதல்<br>ஞான கர்ம ஸந்ந்யாஸ யோகம் | 28 | 23 |
| 5 | செயல் துறவு<br>ஸந்யாஸ யோகம் | 34 | 20 |
| 6 | தியானத்தில் தெளிவு<br>தியான யோகம் | 40 | 40 |

# ஸ்ரீமத் பகவத்கீதை
# ஞானச்சிதறல்


| அத். எண் | பொருளடக்கம் | பக்கம் | பாடல்கள் |
|---|---|---|---|
| 7 | அறிவு, அனுபவமில்லாஅனுபவஅறிவு<br>ஜ்ஞான விஜ்ஞான யோகம் | 49 | 25 |
| 8 | யோகத்தால் அழியாபிரம்மன்<br>அக்ஷரப்ரஹ்ம யோகம் | 56 | 18 |
| 9 | ஞானங்களிலே அரசனாம் உத்தமரகசியம்<br>ராஜ வித்யா ராஜ குஹ்ய யோகம் | 61 | 34 |
| 10 | இறையின் பெருமைகள்<br>விபூதி யோகம் | 69 | 34 |
| 11 | பிரபஞ்சவடிவாய்க் காணுதல்<br>விஶ்வரூப தர்ஶன யோகம் | 77 | 41 |
| 12 | பக்தியும் பக்தனும்<br>பக்தி யோகம் | 87 | 18 |

# ஸ்ரீமத் பகவத்கீதை
# ஞானச்சிதறல்


| அத். எண் | பொருளடக்கம் | பக்கம் | பாடல்கள் |
|---|---|---|---|
| 13 | ஜடம்-சைதன்யம் பகுத்தாராய்தல்<br>க்ஷேத்ர க்ஷேத்ரக்ஞ விபாக யோகம் | 92 | 36 |
| 14 | முக்குணங்களைப் பகுத்துணர்தல்<br>குணத்ரய விபாக யோகம் | 101 | 29 |
| 15 | உத்தமபுருஷன் பரமாத்மா<br>புருஷோத்தம யோகம் | 108 | 23 |
| 16 | தெய்வாசுரப் பகுத்தறிவு<br>தெய்வாஸுர ஸம்பத் விபாக யோகம் | 114 | 32 |
| 17 | மூவித நம்பிக்கையைப் பகுத்தறிதல்<br>சிரத்தாத்ரய விபாக யோகம் | 121 | 31 |
| 18 | முக்தித்துறவு<br>மோக்ஷ சந்ந்யாஸ யோகம் | 130 | 57 |

# ஞானச்சிதறல்

## 1-ம் அத்தியாயம்

## ‘அர்ஜுன விஷாத யோகம்’
## “அர்ஜுனனிடம் துக்கத்தின் வெளிப்பாடு”

அறிவுக்கண் விழித்திருக்க
அக்கண்ணை மறைத்திடும்
அஜ்ஞானத்தின் குழந்தைகளாம்
அதிதுக்கமும் மயக்கமும்

புறக்கண்ணும் குருடு
அகக்கண்ணும் குருடு
திருதராஷ்ட்ர குருடனுக்கு
உடனிருந்து உதவினான்
வியாசரின் அருளாலே
தீர்க்கதர்ஶீ ஸஞ்ஜயன்

அவன்சொல் விளம்ப
விரிவாய் அறிந்தான்
கனமான போரின்
நிகழ்வைப் பற்றியே,

# ஞானச்சிதறல்

பற்றோடு கேட்டான்
யுத்த பூமியில்
நம்மவர் நிலையாது?
பாண்டவர் நிலைஎன்ன?

**பகர்ந்தான் ஸஞ்ஜயன்**
"ஆணவம்மிக மதிமயங்க
துவண்ட துரியோதன்
துள்ளிஎழ சங்கூதினான்
வயோதிகன் பிதாமகன்
அதைக்கண்டு ஊதினரே

அனைத்து கௌரவரும்,
பாஞ்சஜன்யம் பிளிறியது
பௌண்டரம் பொங்கியது
விண்மண்ணை எட்டியது

பாண்டவரின் சங்கொலி
கௌரவரின் இதயத்தை
பிளந்தும் சென்றதுகாண்,
மிகைபடுத்திக் கூறவில்லை
கௌரவரின் மனம்பார்த்துக்
கூறினேன்" என்றான்.

# ஞானச்சிதறல்

வீற்றிருந்த விஜயன்
அமைதியும் அறிவும்சேர
இரதத்தின் சாரதியாம்
விண்ணுலக நாதனைப்
பார்த்து விளம்பினான்
“எம்தேரை நடாத்து!
கண்களால் இறுதியாக
காணவேண்டும் இவர்களை"

கள்ளமற்ற கண்ணனோ
பெருஞ்சத்தியம் செய்த
பீஷ்மரின் முன்புசென்று
தேரை நிறுத்தியே

**“பார்த்தனே பாரென்றான்”**
உற்றாரைக் கண்டதுமே
கலங்கியது கண்களும்
உள்ளமும் குழம்பியதே

என்னுடல் நடுங்குதே
சகுனங்கள் தெரியுதே
நன்மையைக் காணவில்லை
என்றே பகர்ந்தான்

# ஞானச்சிதறல்

**பார்த்தனின் குமுறல்:**

இவர்களில்லா வாழ்வுஏது?
இவ்வெற்றி நிச்சயமானது
அவரடைவரோ அறியேன்
நாமடைவோமோ அறியேன்

இல்லறம் அழியும்
இல்லமோ அழியும்
பஞ்சமா பாதகரைக்
கொல்வது பாவமன்றோ?

வீண்பகட்டு நமக்கேன்
போரைநாம் தவிர்ப்போம்!
குலமோ நசிந்திடும்
குலங்களோ குன்றிடும்
என்றே கோமானும்
குமுறிக் கதறினான்

போரைவிட்டே புறம்போவோம்
என்றேமாயக் கண்ணனிடம்
உள்ளத்தின் குமுறலை
உளறினானே அர்ஜுனன்.

# ஞானச்சிதறல்

வில்அம்பை கீழெறிந்தே
தேர்தட்டில் அமர்ந்தனன்
சோகமான அர்ஜுனன்
எனப்பகன்றான் ஸஞ்ஜயன்

கண்டான் அவ்வனைத்தையும்
கலங்கா அம்மாவண்ணன்.

“அர்ஜுனனிடம் துக்கத்தின் வெளிப்பாடு”
எனும் இம்முதல் அத்தியாயம் முற்றிற்று.

## 2-ம் அத்தியாயம்

## ‘ஸாங்கிய யோகம்’

## “தத்துவ ஞானத்தைப் பெறுதல்”

தத்துவத்தை அறிந்தால்
ஜீவனுக்கு அழிவில்லை,
பரமாத்மாவே ஜீவாத்மா!
ஜீவாத்மாவே பரமாத்மா!

**மாவண்ணன் நோக்கினான்**
“இப்பேடித்தன்மை வந்ததேன்
உள்ளத்தளர்வை உதறியே
வீறுகொண்டெழு விஜயா!
வீண்வாதம்விடு” என்றான்.

அணையும் நெருப்பை தூண்டியதுபோல்
உள்ளிருந்து உளறல் பொங்கியெழ
உத்தமக் கண்ணனை நோக்கியே
உள்ளத்தின் சொற்களை உதிர்த்தான்.

# ஞானச்சிதறல்

"பீஷ்ம துரோண கிருபரை
எங்ஙனம் கொல்வேன் இவர்தமை?
போர்தனை தவிர்த்தே கையேந்தி
உண்ணுதல் சிறந்ததன்றோ நமக்கு,

எதிரிகளற்ற தானியமிகு ராஜ்யம்
மூவுலக போகம்தனை அடையினும்
இந்திரப் பதவிதனைப் பெறினும்
என்சோகம் விலகாதே" என்றான்.

**"கண்ணா! தர்ம அதர்மத்திலே**
**கலக்கம் வந்தது"** என்றான்
**"உன்னடி சரண் புகுந்தேன்"**
என்றே வணங்கினான் பார்த்தன்.

வெகு காலம் காத்திருந்த
கண்ணனின் கள்ளச் சிரிப்பில்
கருத்துகள் ஆயிரம் புதைந்திருக்க
தன்சரண் புகுந்த விஜயனுக்கு,

சாந்தி பெறும்வழி பகன்றார்.
**“சோக மோகம்தனை விட்டெழு!**
**சுகம் தனைக் கைகொள்”**
என்றே உபதேசம் துவக்கினார்,

# ஞானச்சிதறல்

துக்கிப்பதற் கருகதையிலை
துக்கிக்கிறாய் அறிவிலார்க்கு
ஆத்மதத்துவம் அளந்துசொல்கேன்
அர்ஜுனா!இது வேதசாரம்.

நீயும்நானும் இவ்வரசரும்
இல்லாமல் இருந்ததில்லை
இனியில்லாமல் போவதில்லை
இளமை முதுமைநம்மில்
வருவது போல்ஜீவனுக்கு
வேறுடலும் அமைகிறதே.

குளிர்வெப்பம் சுகதுக்கம்
மானம்அவ மானமெனும்
இருமைகள் தோன்றிமறையும்
அவைதமை பொறுத்திடு.

பொறுமையுடன் பொறுத்திடு
நிலையற்றது நிலையற்றதே,
நிலையானதற்கு என்றும்
நிலையில்லாமை என்பதில்லையே.

# ஞானச்சிதறல்

நின்ஆத்மா நிலையானது
உன்சொரூபமோ அதுவாம்
கத்தியோ அதைவெட்டாது
காற்றோ அதைஉலர்த்தாது

நெருப்புமதை எரிக்காது
நீருமதை நனைக்காது
என்றுமுளது பிறவாதது
அழிவில்லா மாறுதலற்றது

அதுநித்தியம் எங்கும் என்றுமுளது
அதுவோ புலனுக்குப் புலப்படாது
அதுசொல் மனதிற்கு எட்டாதது
அவ்வாத்மா எக்காலத்தும் இருப்பது

ஆத்மாவோ கொல்லுவ தில்லை;
அதெதனாலும் கொலையுண்ப தில்லை
அதற்குக் காரணம் காலத்தால்
அழிவென்ப தில்லையே, எனினும்

அதுபிறந்தி றப்பதென்றே கருதிடில்
இங்ஙனம் வருத்தமுறல் சரியன்றே,
அழிவில்லை என்றும் ஜீவனுக்கு
அழியா ஆத்மாவிற்கு அழிவேது?

ஸ்ரீமத் பகவத்கீதை – அத்:02

# ஞானச்சிதறல்

நைந்துபோன சட்டையை
எறிந்துவேறோர் சட்டையை
அணிந்துமகிழ் வதுபோலே
உடலைமாற்று வான்ஜீவன்

பிறந்தவனுக்கு இறப்பு நிச்சயம்
இறந்தவனுக்கோ பிறப்பு நிச்சயம்
உயிரெலாம் தோன்றுமுன் தெரியவில்லை
இறந்தபின் அவைகள் தென்படவில்லை
தவிர்க்க இயலா இவ்விஷயத்தில்
வருத்தம் தவிர் தனஞ்ஜயா!

இதையொருவன் ஆச்சரியமாய்க் காண்கிறான்
வேறொருவன் ஆச்சரியமாய்ச் சொல்கிறான்
மற்றொருவன் ஆச்சரியமாய்க் கேட்கிறான்
யாரொருவரும் அறிவதில்லை கேட்பினுமே!

சொர்க்கவடிவாம் இத்தர்ம யுத்தம்
பாக்யவான் நீயடைந் துளாய்
இத்தர்மம் செயாவிடில் பாவமாம்,
செய்கடமை புகழையும் இழப்பாயே.

ஸ்ரீமத் பகவத்கீதை – அத்:02

# ஞானச்சிதறல்

உலகோர்உனை இழிச்சொல் பேசுவர்
உன்னெதிரி உன்திறமை இகழ்வர்
உயர்மதிப்பு இழப்பாய் இதனின்
உயர்ந்த தோர்துன்பம் வேறுண்டோ!

கொலையுண்டால் சொர்க்கம் நிச்சயம்
வெற்றிகண்டால் பூமியாள்வாய் நிச்சயம்
இருமையாம் இன்பதுன்ப லாபநஷ்டம்
வெற்றிதோல்வி சமமாய் காணர்ஜுணா

செயல்யோகம் செய் எதிர்வினையில்லை
செயல்யோகம் செய் வீணாவதில்லை
இத்தர்மம் நிச்சயம் செய்தனவாய்
இவ்விதம் செய்திடில் பாவமில்லை.

இத்தர்மம் சிறிதளவு செய்யினும்
பெரும்பயம் நீக்கியே காத்திடும்,
வேதகர்ம புகழைப் பாடியே
சொர்க்கமே முடிவாம் என்பரே.

ஸ்ரீமத் பகவத்கீதை – அத்:02

# ஞானச்சிதறல்

போகமனம் இப்பேச்சில் அமிழ்ந்தால்
பற்றுடனும் தெளிவில்லா எண்ணமும்
புத்தியும் பரம்நிலை நிற்பதில்லை,
முக்குண வடிவாம் சாதனமிதில்
பற்றற் றிருமைதனைக் கடந்திடு
தத்துவத்தில் உன்மயமாய் நின்றிடு.

உனக்கதிகாரம் செயல் செய்தலில்
உனக்கதிகாரம் பலனில் வேண்டா,
செயற்பலன் நிர்ணயம் நீசெய்யாதே
செயல் செய்வதை நீதவிர்க்காதே
யோகத்தில் அமர்ந்துசெய் செயல்களை
யோகமென்பது மனதின் சமநிலை.

இதனை மறைக்கச் செய்தது
இவ்வைஷ்ணவி மாயை யன்றோ,
இம்மாயை தனைமறந் திட்டால்
இப்புவி யில்இறப் பில்லையே....

மாதவன் சொல்லை மனம்கேட்டால்
மாதவம் செய்வான் மனிதன்
மாதவன் சொல்லை மாற்றிச்செய்தால்
மாநிலத்தில் பிறப்பான் மனிதன்.

ஸ்ரீமத் பகவத்கீதை – அத்:02

# ஞானச்சிதறல்

ஓபரந்தாமா! அறியஅவா
பூரணன் இலக்கணமேது,
எங்ஙனம் கிடப்பான்,
நடப்பான் இவ்வுலகில்?

**ஓபார்த்தா!**
ஆசைதுறந்தோன் ஆசையெல்லாம் துறந்தான்
செயலாசையல்ல மனதாசை துறந்தான்
தன்னிலேதனைக் கண்டுஇன் புற்றிருப்பான்
தன்னிலேதனைக் கண்டுகளிப் பான்ஞானி

துக்கத்தால் கலங்கிடா மனதுடன்
ஆசைபய கோபம்நீக்கி இப்புவியில்
ஐந்தடக்கிய ஆமைபோல் திரிவான்
அகிலத்தில் அம்முனியே ஸ்திதப்ரக்ஞன்

கொந்தளிப் பியல்புடைய புலன்கள்
பலமாய் இழுத்துச்செல்லா வண்ணமே
தன்வய மாக்கியமர்வான் விவேகி
இவ்விதம் புலன்களை வசமாக்கும்
இவனறிவே நிலைத்த அறிவாம்
இதுவன்றோ ஞானியின் இலக்கணம்.

# ஞானச்சிதறல்

மனஅழிவே மனித அழிவாம்
மடமையால் மண்பொருள் யோசித்தால்
சங்கல்பத்தால் மனதில் பற்றுவரும்
பற்றுவந்தால் உடன் ஆசைவந்திடும்
ஆசைவந்தால் உடன் கோபம்வந்திடும்
கோபம்வந்தால் உடன் மயக்கம்வந்திடும்....

மயக்கம்வந்தால் உடன் மறதிவந்திடும்
மறதிவந்திடில் உடன் புத்தியழியும்
புத்தியழிந்தால் பிராணன் அழிந்திடுமே,
புரிந்திட்டால் இந்நிலை அம்மனிதனுக்கு....

புலனடக்கத்தால் தன்னடக்கம் கைகூடும்
தன்னடக்கத்தால் தியானமும் கைகூடும்
தியானத்தாலே அமைதியும் கைகூடும்,
அமைதியில்லா இவனுக் கானந்தமெங்கே!

உயிர்களுக்கு எதுவிருளோ அதிலே
விழிப்புடனே என்றுமிருப்பான் முக்தன்
உயிரெல்லாம் எதிலே விழித்திருக்குமோ
அதிலே முனிவனிருப்பான் இருளில்.

ஸ்ரீமத் பகவத்கீதை – அத்:02

## ஞானச்சிதறல்

இந்நிலை அன்றோநித்திய ப்ரம்மநிலை
இந்நிலை அடைந்தோன் மோகத்திலில்லை
இதில் நிலைத்தோன் அந்திமத்திலும்
இனிதிரும்பி வாராமுக்தியி லிருப்பான்.

இந்நிலை அறிந்திடு இதையுணர்ந்திடு
இதில் தெளிவாய் நீயிருந்திடு
இதுவே உன்நிலை என்றிருந்திடு
இதில் விழித்திடு! விஜயாஎழுந்திடு!

“தத்துவ ஞானத்தைப் பெறுதல்”
எனும் இவ்விரண்டாம் அத்தியாயம் முற்றிற்று.

# ஞானச்சிதறல்

## 3-ம் அத்தியாயம்

## ‘கர்ம யோகம்’

## “செயலை செயல்யோகமாக்குதல்”

செயல்யோகம் மட்டுமே ஞானமல்ல
செயல்யோகம் இன்றி ஞானமுமல்ல,
குந்தியின் மைந்தன் குடாகேசன்
கும்பிட்டு குணமாய்க் கூறினான்.

**ஓ கேசவா!**
உத்தமம் ஆத்மஞானம் என்றீர்
பின்கோரச் செயல்செய் என்கிறீர்
கலங்குதே என்மனம் புத்தியும்
மாற்றிக் கூறியது என்னை?

பார்காக்கும் பரந்தாமா
அறிவிற்குப் புரியவில்லை
இரண்டினில் ஒன்றை
நிச்சயித்துக் கூறுவீர்

இதிலெத னால்நான்
நன்னலம் பெறுவேனோ
அதைநீர் நிச்சயம்
பகர்வீர் எனக்கு.

# ஞானச்சிதறல்

**பகவான் பகர்ந்தான்**

ஆதியில் அருளினேன்
பாவமற்ற பார்த்தனே!
தத்துவ விசாரத்தை
ஞான யோகிக்கும்
செயல் யோகத்தை
செயல் யோகிக்கும்

இவ்விரு வாழ்க்கைநெறி
இயம்பப்பட்டது எம்மால்
இரண்டும் சிறந்ததாம்
அதனதன் நிலையில்
செயல்உத்தமம் முதல்நிலை,
ஞானம்உத்தமோத் தமநிலை

செயலின்சிறப்பைக் கூறுவேன்
செயல்தவிர்த்தல் இயலாதே,
செயலுலகில் மனிதனுக்கு
செயல்களைத் துவங்காமல்,

# ஞானச்சிதறல்

செயலற்றமுக்தி யுமில்லை
செயல்துறவால் மட்டுமே
செயலில்லாமுக்தி யுமில்லை
எப்பொழுதும் செயல்செயாமல்
எவருமேஇருப் பதில்லை
எனப்பகர்ந்தார் பார்த்தனுக்கு.

இயல்பாக குணங்கள்
செயலிலே தள்ளிடும்
செயல்புலன் நன்கடக்கி
மனதால் பொருட்களை
எண்ணியே வாழுமவன்
பொய்யொழுக்க முடையோன்,

செய்புலன் மனதாலடக்கி
செயல்புலனில் பற்றுவிலக்கி
செயல்யோகம் துவங்குபவன்
செயலில்சிறந்தோன் அறிவாய்நீ.

# ஞானச்சிதறல்

கண்ணாஎன கூவி
செயலோ பற்றுமே
என்றான் பார்த்தன்,
கண்ணன் பகர்ந்தான்
கர்மநிலை புகல்வேன்
கவனமாய் கேளென்றான்.

செயலைநீ செய்யாதே
செயல்யோகம் செய்திடு
உனக்கு விதித்துள
வேதநெறிச் செயல்களை
விதிமீறா வழுத்துவாய்
உன்கடமை இதுவாம்,

செயல் செய்யாமையினும்
செயல் செய்தல்சிறப்பாம்
செயல் செய்யாதோனுக்கும்
செயலில் ஆசைவேண்டும்,

உடலைப் பேணுதற்கும்
உயிரை காப்பதற்கும்
செயல்கள் காட்டாறுபோல்
அவசியம் செய்என்றாரே

# ஞானச்சிதறல்

வேள்வியாய்ச்செய் செயல்களை
வேள்வியால்உலகம் கட்டாது
கதைத்தேனிதை ப்ரம்மனுக்கு
ஆதியிலே என்றார்

வேள்வியால் வந்தது உலகம்
வேள்வியைப் பண்புடன் செய்தால்
வேள்வியால் தேவர்கள் மகிழ்வர்
வேள்விப் பலனும் பெறலாமே!
வேள்வியால் தேவர்களுக் களிப்பாய்நீ!
வேள்வியால் மகிழ்ந்து அவரளிப்பரே.

அளித்து உண்பவன்உத்தமன்
அளியாது உண்பவன்கள்வன்
அளித்து வாழவேகற்றுக்கொள்
அனந்தகோடி நன்மைகள்
அடைந்துநீ மகிழ்வாய்
அர்ஜுனா உலகிலே

# ஞானச்சிதறல்

பேராசை வேண்டாம்
சினம் கஞ்சத்தனம்
தெளிவுறச் செய்யாது
அவைகளை விலக்கியே
எளிதில் அடைந்திடு
தெளிவைநீ சுகத்தைநீ!

இயற்கையுடன் இயைந்துவாழவே
இவ்வுலகிற்கு இன்பமுடன்வந்தாய்!
இயற்கையை இழித்துவாழவா
இவ்வுலகினுக்கு இயல்பாய்வந்தாய்?

உணவினின் றுயிர்கள்உற்பத்தியாம்
உணவோமழை யினின்றுற்பத்தியாம்
வேள்வியால்மழை பொழிகின்றதாம்
வேள்வியோசெய லால்தோன்றுகிறதாம்

வேதத்தால்செயல் களுதிக்கின்றன
வேதமோப்ரம்மத் திடம்உதிக்கிறதே
வேள்வியில்நித்தி யமாய்நிற்கிறதே
வேதமேஎங்கு முளதாதலால்.

ஸ்ரீமத் பகவத்கீதை – அத்:03

# ஞானச்சிதறல்

உழலும் படைப்பு
சக்கரம் பின்பற்றாதோன்
உலகினில் பாவவாழ்க்கை
வாழுகின்றான் அறிவாய்நீ

உலகிலே நீயுமோர்
அங்கமென்று எண்ணியே
உணர்ந்து வாழ்தலே
உத்தமம் அறிந்திடுவாய்

உன்னுடை ஆத்மாவில்நீ
திருப்தியுடன் வாழ்வாய்
உனதாத்ம ஆநந்தத்தில்
திளைத்திருப் பாய்நீயே

இனிசெயவேண்டி யதேதுமில்லை
இங்ஙனம்நன்றா யுணர்ந்துவாழ்ந்தான்
இயாற்றினான்செ யலைஜனகமுனி
இவ்வுலகின்நன் மைக்கருதியே.

# ஞானச்சிதறல்

இங்ஙனம் பற்றின்றி
இயைந்து வாழ்வோன்
இப்புவியில் அவனேமனிதனாம்
இவ்வுலகில் ஆசான்செய்வதையே
இவ்வுலகோர் பிரமாணமாய்
இப்புவியில் கொள்வரே

அம்மூவுலகும் வேண்டாம்எனக்கு!
அதிலுள்ளதும் வேண்டாம்எனக்கு!
அடையவேண் டியதொன்றுமில்லை!
ஆயினும்செய் கிறேன்செயல்களை

அவ்விதம் சோம்பலின்றி
அவைகளைநான் செயாவிடில்
அதையே உதாரணமாய்
அம்மனிதர் கொள்வரே.

என்வழி தனிவழிஅல்ல
என்வழி சாஸ்திரவழியே!
என்வழி என்றும்நல்வழி
என்வழி ரிஷிகளின்வழியே.

# ஞானச்சிதறல்

பற்றால்செயலாற் றுவான்அஜ்ஞானி
பற்றற்றுசெயலாற் றுவான்அம்முனி
பலன்கள்கரு தியாஎன்றால்
பாரின்நலன் கருதிஎன்றான்

மூடன்பிரகிருதியின் குணங்களால்
தான்செய்வதாய் எண்ணுவான்
தான்செய்வதாய் மகிழ்வான்
அகங்காரத்தில் திகழ்வான்
தன்நற்குணம் இழப்பான்
தன்நிலைமறந் தழிவான்.

தன்தர்மம்செய் திடில்உத்தமம்,
தன்னில்பிறர் தர்மம்நீச்சம்.
தன்தர்மத்தில் இறப்புமுயர்வாம்
தன்னில்பிறர் தர்மம்அழிவாம்.

ஆத்மாவில்உன் மனதைவைத்திடு
அனைத்துப்பலனை யும்அர்ப்பணித்திடு
அனைத்துச்செயலை யும்எனக்களித்திடு
அகக்கொந்தளிப்பின்றி போர்புரிந்திடு.

ஸ்ரீமத் பகவத்கீதை – அத்:03

# ஞானச்சிதறல்

உத்தமக்கண்ணா உரைத்திடு
உலகோர்உன் மத்தன்போன்று
பலமாய்உந்தப் படுவதேன்
பாவச்செயலில் தன்வயமின்றி!

ஆசைகோப மெனும்அரக்கர்
ஆயுள்எதிரி அறிந்துகொள்
ரஜோகுணத் தோன்றல்
என்றறி வாயிதை

தீயினை புகையும்
கண்ணாடியை அழுக்கும்
கருவை கருப்பையும்
மூடிமறைப் பதுபோல்
இதனால் ஞானம்
நன்றாய்மறை பட்டுளதே.

# ஞானச்சிதறல்

இவ்விருவர் வசிக்குமிடம்
இந்திரியமன புத்தியிலன்றோ!
இவைதாம் ஞானிக்குப்பகை
இவைஎன்றும் நிறைவடையா

இவ்வேட்கை எனும்இக்கனல்
இவ்வுடல்உடை யோனைமயக்குதே
இப்புலன்களை நன்றாய்வசமிருத்தி
இப்பாவியை நிச்சயம்விலக்கிடு

ஆசையாம் பாவத்தைஅழித்திடு
ஆத்மாவை இங்கேஅறிந்திடு
ஆத்மாவாய் என்றும்நிலைத்திடு
அர்ஜுனா! உனக்குஉபதேசமிது

கடமையைசெய் பெருந்தோளா!
காமகுரோதம் கலங்கிடவே
கவனமுடன் செய்திடிலோ
காணலாமிங்கே இறைவனை.

# ஞானச்சிதறல்

மனமேநில் உன்னைக்கவனி
மடமையை அழிப்பாய்நீ
மனிதவாழ்க்கை சிறந்தது
மனிதத்தன்மை உயர்ந்தது
செயல்யோகம் செய்வாய்நீ
செயல்யோகத்தையே செய்வாய்நீ

"செயலை செயல்யோகமாக்குதல்"
எனும் இம்மூன்றாம் அத்தியாயம் முற்றிற்று.

## 4-ம் அத்தியாயம்

## ‘ஞான கர்ம ஸந்ந்யாஸ யோகம்’

## “அறிவால்செயலை விலக்கிஅறிதல்”

செயல்செய்யாமல் ஓய்வில்லை
செயல்மட்டுமே பயனில்லை
ஞானத்தில்முற்று பெறும்செயல்
ஞானத்திற்குப்பின் ஏதுசெயல்!

கிருஷ்ணரின் போதனை
ஞானகர்ம சன்னியாசம்
அன்றுபகர்ந்தேன் விவஸ்வானுக்கு
அவனளித்தான் மனுவிற்கு
அவ்விதம் வழிவழியாய்வந்த
அவ்வேதஞானம் மறையுதே.

அன்புத்தோழனும் பக்தனும்நீ
அப்பழமையாம் அதேயோகம்
இத்தினத்தில் என்னாலுனக்கு
இயம்பிய மேலாம்இரகசியமாம்

# ஞானச்சிதறல்

**அர்ஜுனன் வினவினான்**

ஆதவன்பிறப்பு முன்தோன்றியது
ஆதியிலெங்ஙனம் இதையளித்தீர்
அதைநான்எவ் விதமறிவேன்
ஆதிநாயகனே எனக்கருள்வீர்

**பகவான் பகர்ந்தார்**

நாமிருவர் பிறந்துளோம்
நானாபிறவிகள் இப்புவியில்,
நானறிவேன் இதுசத்தியம்
நீஅறியாய் இதுநிச்சயம்

உன்பிறப்பு அறிவேன்
என்பிறப்பு அறிவேன்
உன்பிறப்பு அறியாய்
என்பிறப்பு அறிவாயோ?

உயிர்களுக்கு நானீஶன்
உள்ளிருந்து இயக்குபவன்
உயர்தர்மம் காத்திட
உலகில் தோன்றுவேன்
உதவியேதும் தேவையின்றி
உலகோர்க்கு உபதேசிக்க

# ஞானச்சிதறல்

பிறப்பில்லாநான் பிறப்பேன்
பரதர்மம் புதுப்பிப்பேன்,
பாமரனாய் யுகந்தோறும்
பார்தனை காக்கவே,
பாரினில் அவதரிப்பேன்
பார்த்தனே! அறிவாயிதை.

இச்சைசினம் நீங்கிட
செயல்யோகம் செய்திடு,
என்னிடம் சரண்புக
பக்தியோகம் பண்ணிடு
என்சொரூபம் அறிந்திட
ஞானதவம் இயற்றிடு
இத்தவம் இயற்றுவோர்
என்இயல்பு அடைவரே

வேதஅன்னை துணையுடன்
குணசெயலுக் கேற்பவே
நால்வித வர்ணங்களை
இவ்வுலகில் படைத்தேனே

செவ்வையாய் இவ்விதமே
செய்தேனே இவைகளை
செய்தும் செயாதவனாய்
எனை நீஅறிவாயே

ஸ்ரீமத் பகவத்கீதை – அத்:04

# ஞானச்சிதறல்

செயல்கள்யாவும் எனைத்தீண்டா
செயல்பலனில் ஆசையில்லை
செயல்களைக் கடந்தஎனை
செவ்வையாய் அறியுமவன்
செயல்பலனால் கட்டுண்ணான்
செயலைச்செய் இவ்விதம்நீ.

செயல்களை முன்னோர்
செய்விதம் அறியும்நீ
செயல்களைச் செவ்வையாய்
செய்வாய் தனஞ்ஜயா!

செயல்கள் பலவிதம்
செயல்களைப் பற்றியும்
செயலின்மை பற்றியும்
சீரறிவு உள்ளோனும்
செயல்களைப் பற்றி
செய்வது அறியானே

செயலதன் இயல்பு
சொல்வதற்கு அரிதாம்
செயல்களில் செயலின்மையும்
செயலின்மையில் செயலையும்
உள்ளபடி அறிவான்ஞானி
உள்ளதையறியான் அஜ்ஞானி!

ஸ்ரீமத் பகவத்கீதை – அத்:04

# ஞானச்சிதறல்

பலவித வேள்விகள்
பயன்பெற வந்தன,
சித்தத்தை தூய்மையாக்க
செயலை செம்மையாக்கு

உடல்புலன் புத்தியும்
ஒன்றுபட்டு விளங்கவே
வேள்விகள் விளம்பினேன்
தானதவ வேள்வியில்
ஞானவேள்வி உத்தமம்
வீடுபேறும் அளித்திடும்.

கர்மங்கள் அனைத்துமே
ஞானத்தில் முற்றுபெறும்,
ஞானகர்ம துறவுஅது
செயல்துறவை செய்வாய்நீ.

அக்னிக்குஞ்சு போதுமே
அடர்ந்தகாடும் அழியவே,
ஞானக்குஞ்சு போதுமே
அனாதிஇருள் அழியவே.

பாவியாயுனை எண்ணிடினும்
ஞானப்படகில் ஏறினால்
பரமனையிங் கடையலாம்
பிறவிக்கடலைக் கடக்கலாம்.

ஸ்ரீமத் பகவத்கீதை – அத்:04

# ஞானச்சிதறல்

நம்பிக்கை அற்றவன்
அடைவது அஜ்ஞானம்
நம்பிக்கை உடையவன்
அடைவது தன்ஞானம்
அறியாமையால் செயல்சேரும்
அறிவால் செயலொழியுமே

உன்செயலை வேள்வியாக்கு
உள்ளத்தை தூய்மையாக்கு
உன்னையே ஆகுதியாக்கு
உன்வாழ்வையே வேள்வியாக்கு.

ஞானத்தால் கடந்திடுவாய் கர்மத்தை
ஞானத்தால் பெற்றிடுவாய் தர்மத்தை
ஞானத்தால் மறந்திடுவாய் ஞாலத்தை
ஞானத்தில் அமிழ்த்திடுவாய் சித்தத்தை!

"அறிவால்செயலை விலக்கிஅறிதல்"
எனும் இந்நான்காம் அத்தியாயம் முற்றிற்று.

## 5-ம் அத்தியாயம்

## ‘ஸந்யாஸ யோகம்’
## “செயல் துறவு”

மனதில் தூய்மைபெற
மனதில் அமைதிபெற
மனதில் ஞானம்பெற
மனதில் துறவுறு

யோகமில்லாது ஞானமில்லை
ஞானமின்றி ப்ரம்மனில்லை
இதையுணரா குடாகேசன்
செயல்யோகம் சிறந்ததா?
செயல்துறவு சிறந்ததா?
கண்ணா!பகர் சிறந்ததெது?

பகவான் பகர்ந்தார்
செயல்-துறவு இரண்டில்
செயல்துறவு சிறந்தது
செயல்யோகமோ உயர்ந்தது.

# ஞானச்சிதறல்

கருத்தினில் பலனை
கருதாது செய்திடில்
செயல்துறவி பெறும்நிலை
செயல்யோகியும் அடைவர்
முயற்சிசெயும் முனிவரும்
முக்திஉடன் அடைவரே!

புதியதோர் புரட்சியீது
துறவிக்குத் தூரிகையாலே
புதுவர்ணம் தீட்டினானே,
என்றுமே எதிலுமே
விருப்பில்லை வெறுப்பில்லை
இருமைதனை விட்டொழித்தே
தளைகளைத் தகர்த்தவனாம்
நித்தியயோகி! துறவியாமே!

அடங்கிய செயல்புலனால்
அடைந்தான் செயல்யோகத்தை
அதனால் மனத்தூய்மையாம்
அவன்செயல் கள்செய்யினும்
அவனைச்செயல் கள்தீண்டாவே
அவனன்றோ தத்துவயோகி!

ஸ்ரீமத் பகவத்கீதை – அத்:05

# ஞானச்சிதறல்

அவனனைத்து உயிரையும்
அவனான்மாவாய்க் காணுவான்
அந்நிலை அடைந்தோன்
அவனேயதைக் காண்பவனாம்.

உண்ணும்போதும் உறங்கும்போதும்
பேசும்போதும் காணும்போதும்
தொடும்போதும் நடக்கும்போதும்
கண்மூடினும் இமைக்கும்போதும்
தானெதையும் செய்யவில்லை
என்றெண்ணியே இருப்பானவன்.

ப்ரம்மனிடம் வைத்தமனம்
பாவத்திலே பற்றாதுமனம்
பற்றின்றி செயல்புரியும்
பத்மஇலை தண்ணீர்போல்,

உடல் இந்திரியமும்
மனம் புத்திமட்டுமே
செயல் யோகியிடம்
செயலைச் செய்திடுமே.

# ஞானச்சிதறல்

செயலில் பலன்களில்
பற்றுவைக் குமவனே
வினையின் விளைவாலே
வலையில் வீழ்வானே.

விவேகியோ செயல்விலக்கி
விவேகத்தால் புலனடக்கி
விவேகத்தால் மனதடக்கி
விவேகத்தால் ஏதும்செய்யாது,

விவேகமுடன் சுகமாய்
ஒன்பதோட்டை நகரில்
ஒய்யாரமாய் வீற்றிருப்பான்
அர்ஜுனாஇதை அறிவாயே!

செயலைச்செயத் தூண்டானவன்
செயல்பலனில் இணைக்கானவன்
செயல்தூண்டும் இயற்கையாலே
செயலில்லை ஆன்மாவிற்கே
எங்குமுள்ள அப்பரமாத்மா
புண்யபாவம் ஏற்பதில்லையே

# ஞானச்சிதறல்

அறிவைமறைத் ததுஅறியாமை
ஆதலால்மயங் கினர்மனிதர்கள்
அறியாமைஅழி யும்அறிவாலே
அவர்ஞானம்ஆத வனாய்மிளிருமே

அதிலேநிலைபெற்று அதனையே
அடைக்கலமடைந்து பாவமெல்லாம்
அழித்தோர்பரமநிலை அடைவரே!
அந்நிலைதிரும்பிவாரா முக்திநிலை!

அனைத்துமேசமம் அந்தஞானிக்கு
அந்தணபசு யானைநாயிடத்தும்
அங்ஙனம்மன மதுசமநிலை
அடைந்தால்பிறவிச் சுழலகலும்
அந்நிலைஅதுவே ப்ரம்மநிலையாம்
அந்நிலைஅடைந் தோனேப்ரம்மனாம்.

**குந்தியின் மைந்தா!**
தொடக்கம் முடிவுமுளதே
தீண்டினால் துக்கம்தந்திடுமே
மனமடக்கிச் சமநிலையுற்றால்
மகிழ்ச்சியுடன் யோகியும்வாழ்வரே.

ஸ்ரீமத் பகவத்கீதை – அத்:05

# ஞானச்சிதறல்

அரக்கரிருவர் ஆசைகோபம்
ஆத்மஞானிமுன் ஓடிமறைவர்
துறந்தவனுக்கே எல்லாஅமைதியும்
துறந்தவனுக்கே எல்லாஆனந்தமும்.

உள்ளொளி பெற்றயோகியவன்
உள்ளத்தில் பூரணனாமென்றும்
துறந்தேன் என்பதைத்துறந்தான்
துறவுநிலை அமர்ந்தான்அவனே!

"செயல் துறவு"
எனும் இவ்வைந்தாம் அத்தியாயம் முற்றிற்று.

## 6-ம் அத்தியாயம்

## ‘தியான யோகம்’
## “தியானத்தில் தெளிவு”

**ஞானமின்றி தியானமில்லை**
**தியானமே ஞானமல்ல**

ஞானத்தால் என்சொரூபம்
ஞானதியானத்தால் தெளிவாம்
ஞானத்தின் முடிவில்ஏதுண்டு
ஞானசொரூபமே அங்குண்டு.

அக்னியும்கர்மமும் செய்வான்
அவைதம்பலனைச் சாராமல்
சன்னியாசியோகியும் செய்வரே
அவைவிட்டவன் அவ்வாறாகான்
சங்கல்பம் துறவாதயாரும்
யோகியாய் ஆகமாட்டாரே.

தியானமேடை ஏறிஅமர
செயல்யோகம் வேண்டுமே
தியானத்தில் நன்கமர
செயலின்மை வேண்டுமே

# ஞானச்சிதறல்

தன்னைவென்றால் அவன்
தனக்குநண்பன் ஆவான்!
தன்னைவெல்லா அவனோ
தனக்குப்பகைவன் ஆவான்

அவனாத்மாவே அவன்நண்பன்
அவனாத்மாவே அவனுடைபகைவன்
உனையென்றும் தாழ்த்தலாகாது
உன்னைநீயே உயர்த்திக்கொள்!

தனைவென்றால் மனம்தெளியும்
சீதஉஷ்ணம் சுகதுக்கம்
மானாவமானம் அகன்றிடும்
மனம்நின்றிடும் ஆத்மாவிலே,

மண்கல் பொன்னுமே
சமமாம் அந்தயோகிக்கு,
நண்பனையும் பகைவனையும்
பாவியையும் சாதுவையும்,

உறவுகள் அனைத்தையும்
சமமாகக் காண்பானவன்
புண்ணியம் சேர்க்கானவன்
ஆத்மஞானி அவனேயோகி

ஸ்ரீமத் பகவத்கீதை – அத்:06

# ஞானச்சிதறல்

**தியானம் செய்வதெப்படி?**

உடல்தலை கழுத்துமிவை
அசையாமல் இருத்தியே
திசைகளைக் காணாமல்
யோகத்தைப் பயில்வாய்நீ,

உத்தம இடத்திலே
உறுதியும் தூய்மையும்,
உயர்வும் தாழ்வுமிலா
உன்னுடை ஆசனத்தில்,

அமர்ந்து யோகம்தனை
அடங்கிய மனதுடன்
தெளிந்த எண்ணமுடன்
சிந்தனையில் அமர்ந்து,

சமமான நோக்குடன்
எனையே குறிக்கோளாய்
நிலையாய் தியானிப்பாய்
என்னைநீ அடைவாயே.

அதியுணவு உறக்கமும்
யோகந்தனை உனக்குதாரா,
உறக்கம் உணவுமிலாது
யோகம்என்றும் உனக்குவாரா

ஸ்ரீமத் பகவத்கீதை - அத்:06

# ஞானச்சிதறல்

தியானத்திலே நன்றாய்
தன்மனதைச் செலுத்தி
தியானமதில் யோகியவன்
தன்முக்தியில் மூழ்குவான்.

புறப்பற்று இல்லாமனம்
தியானப்பற்று டைமனம்
காற்றில்லா இடத்திலே
கலங்காத தீபம்போல்,

தியானிமனம் தியானத்தில்
தன்னில்தனைக் காணும்
தன்னிலேதனைக் கண்டுதிளைக்கும்
திருப்தியில் மகிழ்ந்துலாவும்.

புலன்களுக் கெட்டாதாம்
புத்தியால் அறியலாம்
நிலையாம் சுகத்தை
உள்ளபடி உணரலாம்,

தியானயோகம் என்றால்
துக்கத்தின் முடிவாம்
உறுதியாய்ப் பயின்றால்
உள்ளதை உணரலாம்,

ஸ்ரீமத் பகவத்கீதை – அத்:06

# ஞானச்சிதறல்

உள்ளதுவோ ஒன்றென்று
உலகில் இனிபெற
உகந்த தொன்றும்மில்லை
என்றெண்ணியே இருக்கும்,

உறுதியான புத்தியுடன்
உன்னதமாய்ச் செய்திடுவாய்
வேகமாய்ச் செய்திடிலோ
விபரீதம் விளைந்திடுமே
மெதுவாய்ச் செய்திடிலோ
நன்றாய் வளர்ந்திடுமே.

சிதறாமல் செய்திட
சித்தத்தில் இருந்திடு,
உன்னைநீ அறிந்திட
உன்னில்நீ இருந்திடு.

பரமனை அறிவாய்நீ
பாவங்கள் தொலைந்திடும்
சமம்தனை அடைவாய்
ஆத்மாவில் நிலைப்பாயே.

# ஞானச்சிதறல்

தானாத்மா எனும்யோகீ
தனைஎல்லா உயிர்களிலும்
தன்னிலெல்லா உயிர்களையும்
தன்மயமாய் காண்பானே.

எவனெனை ஒன்றாயும்
எங்கும் காணுமவன்,
எனைவிட்டு அவனும்
அவனைவிட்டு நானும்

ஓர்கணமும் விலகோம்,
எச்செயல் செய்திடினும்
எப்பாங்கில் இருப்பினும்
எவ்விடம் உலாவிடினும்,

என்னிடமே இருப்பான்
என்னிலேயே இருப்பான்
எனையறிவான் ஞானி
அவன்தியான யோகீ.

ஹேகண்ணா! என்றழைத்தே
கணப்பொழுதும் நில்லாமனம்
கலக்கமாய் இருக்கும்மனம்
காற்றுபோல் பலமாம்மனம்,

# ஞானச்சிதறல்

காற்றினும் வலிமையாம்
காற்றினும் வேகமாம்மனம்
காற்றுபோல் அடக்குவதும்
கடினமன்றோ! புகல்வீரே

குந்திமகனே! உன்சொல்சரியே
பயிற்சியும் முயற்சியுமே
அதிபலமாய் இருந்தாலோ
அடங்கிடும் வைராக்யத்தால்,

யோகம் பயின்றவனும்
பாதியில் விட்டவனும்
பாரைஅனு பவியான்
பரத்தையும் அடையான்
பாவமன்றோ இந்நிலை
பகர்வீர் பரந்தாமா!

வருத்தம் தவிர்ப்பாய்மகனே!
நற்செயல்கள் வீணாவதில்லை
நல்லதைச்செய் நலன்நிச்சயம்
ஆத்மயோகம் துவங்கியவன்
இகத்திலும் பரத்திலுமே
அதோகதி அடையானவன்.

# ஞானச்சிதறல்

புண்யலோகம் அடைவான்
பெருங்காலம் வாழ்வானே
பின்பிறவி எடுப்பானவன்
நற்செல்வர் இல்லத்திலோ

நல்குலக் குடியிலோ
தவசிகள் வீட்டிலோ
உத்தமனாய் பிறப்பானே
சாதனைசெய வாழ்வானே,

பொங்கிஎழும் நல்பாலை
வேறுஅடுப்பில் வைத்தால்
பொங்குவது தொடருமாம்,
பாதியில் விட்டவனும்
விட்டஇடம் தொடர்வான்
யோகம்தனை அடைவான்.

யோகம்தனில் நழுவியவன்
பிறபிறவிகள் தவிர்த்து
இப்பிறவியில் அரிதான
மனிதப்பிறவி அடைந்து
யோகசாதனை தொடர்வானே
தனைஆத்மாவாய் அறியவே.

# ஞானச்சிதறல்

கணக்குகள் தீர்ந்திட
கதியினை எய்திட
காலத்தைக் கடந்திட
காலனையும் வென்றிட,

பாவங்களைப் போக்கிட
பரத்தில் இருந்திட
அகிலத்தில் அரிதாம்
ஆத்மாவைத் தியானிப்பான்.

அறியாமையை அழிக்கின்றான்
ஆத்மாவை அறிகின்றான்
இங்கிதுவே ஆத்மதியானம்
இதுவன்றோ தியானயோகம்.

யோகியாவாய் பார்த்தனே!
தியானயோகியாவாய் பார்த்தனே!

"தியானத்தில் தெளிவு"
எனும் இவ்வாறாம் அத்தியாயம் முற்றிற்று.

ஸ்ரீமத் பகவத்கீதை - அத்:06

## 7-ம் அத்தியாயம்

## ‘ஞானவிஜ்ஞான யோகம்’

## “அறிவு, அனுபவமில்லாஅனுபவஅறிவு”

பார்த்தனே! மனம்ஒன்றி
பாங்குடனே பயில்வாய்
பக்தியின் இலக்கணம்
பகர்வேன் மீதமின்றியே

அறிந்தபின் அறிய
வேண்டிய தேதுமில்லை
அவ்வறிவைக் கூறுகேன்
அதுஞான விஜ்ஞானம்

ஆயிரத்தில் ஒருவன்
முயன்று, அவ்விதம்
முயல்வோரில், ஒருவன்
முடிவை அறிகிறான்
முக்தியைப் பெறுகிறான்
உள்ளதை உணர்கிறான் (தானாய்)

# ஞானச்சிதறல்

நிலம்நீர் கனல்காற்று
நீலவானம் மனம்புத்தி
நானெனும் எண்வகையாம்
என்னுடை கீழ்பிரக்ருதி
எனுமிது தோன்றுவதாம்
இவற்றினும் வேறானதாய்
இவைகளைத் தாங்குவதென்
மேலாம்பிரக்ருதி அறிவாயே

உயிர்கள் அனைத்துமே
பிறந்து ஒடுங்குமிடம்
நானென்று அறிவாயே,
இவைதமக்குக் காரணன்
நானன்றி வேறில்லை,
நூலிலே இணைந்துள்ள
மணிகளைப் போன்றிவை
என்னிடத்தே உள்ளன.

உள்ளங்கை நெல்லிபோல்
உணரலாம் உண்மையை,
கண்தனை திறந்திட்டால்
கண்டிடலாம் எந்தனை.

ஸ்ரீமத் பகவத்கீதை – அத்:07

# ஞானச்சிதறல்

சூரியஒளி  நான்
சந்திரஒளி  நான்
நீரில்சுவை  நான்
மறையிலேஓம்  நான்

மண்ணிலேமணம்  நான்
உயிரிலேஉயிர்  நான்
தவசியில்தவம்  நான்
அழியாவிதையும்  நான்

அறிவின்அறிவு  நான்
அறமாகவுளேன்  நான்
ஆசையாகவுளேன்  நான்
அறிவாய்நீ  அர்ஜுனா!

அகிலத்தில்  முக்குணம்
அதனால்  ஆனவைகள்
அறிவாய்என்  னாலென்று
அவையெலாம்  நானென்று

அவைகள்  என்னிலுள
அவையிடம்  நானில்லை
அவையெலாம்  தோற்றமே
ஆதாரம்  நான்மட்டுமே!

ஸ்ரீமத் பகவத்கீதை – அத்:07

# ஞானச்சிதறல்

முக்குணத் தோன்றலில்
மூழ்கிடும் மனிதர்கள்
எனைவேறாய் அறிவர்
அழியானென அறியார்

என்னுடை அம்மாயையை
வெல்வது அரிதாமே
என்சரண் அடைந்தோர்
வெல்வரே அம்மாயையை

வலைதனை வீசினால்
வசப்படும் அனைத்தும்
வலையில் அகப்படான்
வீசியவன் அர்ஜுனா!

பக்தனிலோ நால்வகை
அதில்மூவர் ஒருவகை
ஞானியரோ தனிவகை
அனைவரும் சிறந்தோர்
அவர்களில் ஞானியோ
அதிமிகச் சிறந்தோன்.

# ஞானச்சிதறல்

ஞானிக்குப் பிரியன்நான்
எனக்கும் பிரியனவன்
வாசுதேவ மயம்எலாம்
என்றுணரும் ஆத்மஞானி
என்னையே அனைத்துமாய்
எல்லாமாய் அறிகிறான்.

அவனைப்போலே ஓர்பிறவி
அவனியிலில்லை ஓர்பிறவி
அவனைப்போல் காண்பதரிது
அவனினும் பிரியமானதேது
அனைவரும் எனக்குப்பிரியரே
ஆத்மஞானியோ அதிப்பிரியன்.

பிறவாஎனைப் பிறந்தவனாய்
மனிதவடிவில் பிறப்பதாய்
அழிவிலாஎனை அழிவதாய்
அஜ்ஞானக் குருடர்கள்
அறியாமையால் அறிவார்கள்
அறியாரவர் எனைஎன்றும்.

# ஞானச்சிதறல்

ஆசையில் பிடிபட்டு
அவர்தம் நியமத்தை
ஆவலுடன் இயற்றியே
அகிலத்தில் தேவரை
அவராசைப் பொருளை
அடையத் தொழுவரே.

எப்பக்தன் பக்தியுடன்
எப்பொருள் வேண்டியும்
எப்பலன் வேண்டியும்
எத்தேவரை வழிபடினும்,

அப்பக்தன் நம்பிக்கையை
அதிகமாய்ச் செய்வேனே
அப்பக்தன் அப்பலனை
அடைந்திடச் செய்வேனே

முக்காலத்தில் பிறவேன்
முக்காலமும் அறிவேன்
எக்காலத்தும் அறியார்
காலம்கடந் தவனாய்.

# ஞானச்சிதறல்

பரந்தபா! பாரினில்
பிறந்தோர் இருமையில்
பீடித்து சோகமோக
பற்றிலே புகுவர்காண்!

புண்ணியச் செயலாலே
பாவத்தை விலக்கியே
பிறவிக்கு மூலமாம்
பற்றையும் இருமையும்
பிறப்பையும் மூப்பையும்
பிடியாது என்னிடம்
பிரியமாய் பக்தியால்
ப்ரம்மத்தை அறிவரே!

சகுணநிர்குண அறிவும்
ஞானவிஜ்ஞான அறிவும்
பராபரபக்தி அறிவும்
பகர்ந்தேன் அதிவிதமாய்
பராபக்தியால் அவ்விதமே
பரம்எனைநீ அடைவாயே.

ஸ்ரீ

"அறிவு, அனுபவமில்லாஅனுபவஅறிவு" எனும் இவ்வேழாம் அத்தியாயம் முற்றிற்று.

ஶ்ரீமத் பகவத்கீதை - அத்:07

## 8-ம் அத்தியாயம்

## ‘அக்ஷரப்ரஹ்ம யோகம்’

## “யோகத்தால் அழியாப்ரம்மன்”

யோகநிலைதந்திடும் கிரமநிலை
யோகநிலைதராதாம் ஞானநிலை
யோகந்தனைதவறாமல் செய்திடிலோ
யோகநிலைதகுதிதரும் ஞானம்பெற

அழிவில்லாப் ப்ரம்மத்தின்
ஆனந்தசொரூபம் அத்யாத்மம்
அனைத்து உயிர்களையும்
அவைஉருவாக்கி நின்றிட
அருளுதல் வேள்வியாம்,
அழிவுறும் இயல்பை
அதிபூதமென் றறிவாய்,
அதிதெய்வம் அப்புருஷனே!

அதியக்ஞமாய் இவ்வுடலில்
உள்ளுறைபவன் நான்தானே
உணர்வுடன் எனைநினைந்து
உடலைவிட்டு செல்வரெவரோ
அவரென் சொரூபத்தை
அடைவர் ஐயம்தவிர்!

ஸ்ரீமத் பகவத்கீதை – அத்:08

# ஞானச்சிதறல்

இறக்கும் தறுவாயில்
எதையெதை எண்ணியே
இவ்வுடல் துறப்பவர்
அதையதை அடைவரே

தியானப் பயிற்சியால்
தியானத்தில் மூழ்கிடும்
தியானியின் மனம்
தியானப்பொருள் சுடரை
தியானத்தில் பெறுவரே
தியானயோகி அறிவாரே

வேதியர் சொல்லுமதில்
துறவிகள் புகுவரே
அந்நிலை உயர்நிலை
பகர்வேன் சுருக்கமாய்,

புலன்களை அடக்கியும்
பிராணனை அடக்கியும்
உள்ளத்தில் மனதினை
உறுதியாய் இருத்தியே

தாரணையில் நின்று
பிரணவம் ஜபித்தே
உயிர்விடும் யோகிகள்
உயர்கதி அடைவரே!

# ஞானச்சிதறல்

அந்நிலை நின்றயோகி
அடைவரே எளிதாயெனை
துன்பமில்லை எனையடைந்தால்
துக்கமேது பிறவியேது

எறும்புமுதல் நான்முகனும்
பிறவுலகும் எல்லாமும்
மறுபிறவி உடையதே
எனையடைந்த முனிவரோ
பிறப்பதில்லை இப்புவியில்
அறிவாயிதை பார்த்தனே!

நான்முகனின் ஓர்தினம்
ஆயிரம்சதுர்யுகம் ஓர்பகல்
ஆயிரம்சதுர்யுகம் ஓர்இரவு
அங்ஙனமறியும் மனிதர்கள்
அறிவரென்றும் நான்முகனின்
பகலிரவை ஓர்நாளாய்

அனைத்து உலகமும்
அனைத்து உயிர்களும்
ஒடுங்கிடும் இரவில்
தோன்றிடும் பகலில்
அதேயிந்த உயிர்கள்
அல்லும்பகலும் தோன்றி
காலத்திலே ஒடுங்கி
காலத்தில் பிறக்குமே

ஸ்ரீமத் பகவத்கீதை – அத்:08

# ஞானச்சிதறல்

உயிர்களெல்லாம் அழிந்தாலும்
உள்ளதுவோ அழிவதில்லை
புலன்களுக்குப் புலப்படாது
என்றுமுளதாய் உள்ளதது

வெளித்தோன்றா அழியாஅதை
உயர்கதியென சொல்வரதை
அங்குசென்றோர் திரும்பலில்லை
அந்நிலையேஎன் மேலாம்நிலை.

உத்தராயணம் உத்தமகதி
தக்ஷிணாயணம் மத்யமகதி
உத்தராயணப் பயணமோ
பகலொளிப் பயணமாயறி
தக்ஷிணாயணப் பயணமோ
புகையிரவு பயணமாயறி,

இவ்விரு வழிகளை
அறியும் யோகியர்
மயக்கும் அக்கதியை
அடையாரே அர்ஜுனா!

யோகத்தை பயின்றிடு
யோகத்திலே நின்றிடு
வேதகர்ம வேள்வியும்
ஓதியும் செய்வதுவும்
தானமும் தவங்களும்
புண்ணியம் அளித்திடும்,

# ஞானச்சிதறல்

யோகியவன் அறிவான்
அவைகளை நன்றாய்
விலக்கியே அடைவான்
ஆதியாம் என்கதியை
அடைந்திடு அக்கதியை
அறிவாய் அக்ஷரமாய்.

"யோகத்தால் அழியாப்ரம்மன்"
எனும் இவ்வெட்டாம் அத்தியாயம் முற்றிற்று.

# ஞானச்சிதறல்

## 9-ம் அத்தியாயம்

## ‘ராஜவித்யா ராஜகுஹ்ய யோகம்’
## “ஞானங்களிலே அரசனாம் உத்தமரகசியம்”

ராஜவித்யா நேரடிவித்யா!
முக்திவித்யா சுலபவித்யா!

குற்றம்காணா குந்திமகனே!
எவ்வறிவால் மேன்மையோ
அவ்வறிவை நானுனக்கு
விரிவாய்ப் பகர்வேன்கேள்.

வித்தையில் அரசனாம்
ரகஸ்யத்தில் ராஜனாம்
தர்மத்துடன் உள்ளதாம்
நேரடியாய் அறியலாம்.

அம்பரத்தைக் கடந்தும்
வியாபித்தும் உள்ளேன்
விளைந்தது அனைத்தும்
என்னிலே உள்ளதுகாண்,
காரணன் நானல்ல
காரணன் ஈஶ்வரனே
அவைகள் என்னிடமில்லை
இதுஎன் யோகமகிமை

ஸ்ரீமத் பகவத்கீதை – அத்:09

# ஞானச்சிதறல்

ஆகாயத்தில் வாயுபோல்
எல்லாம் என்னிடத்துள
தோற்றமெலாம் ஒடுங்கும்
பிரளயத்தில் என்னிலே
தோற்றத்தை அடையுமே
கல்பத்தின் துவக்கத்தில்

காரணம் கேட்டால்
காரணம் மாயை
காரணன் நானல்ல
காரணம் அற்ற
காரணன் நானே,
காரண மாயை
செய்திடும் செயல்
எனைத் தீண்டாதே

ராஜவித்யா நேரடிவித்யா!
முக்திவித்யா சுலபவித்யா!

மானிட உருவில்
மண்ணிலே வந்துளேன்
மரண முடையோர்
மதியார் எனையே

ஸ்ரீமத் பகவத்கீதை – அத்:09

# ஞானச்சிதறல்

வீணாசை கோணலறிவு
வீண்செயல் செய்வோரும்
வீணறிவு உடையோரும்
விவேகம் அற்றவரும்
அசுர இயல்பினை
அடைவரே இப்புவியில்

சஞ்சலமே இல்லாத
சாதுக்கள் தேவகுணம்
சார்ந்தே இருப்பர்காண்
உயிர்கள் அனைத்திற்கும்
அழியாக் காரணமாய்
எனையே வணங்குவர்

என்புகழ் பாடியே
என்னிடமே அடைந்து
பக்தியுடன் துதித்து
ஒருமுகமாய் நின்று
என்னிடமே அன்புடன்
என்னையே வணங்குவர்.

ஞானயோக வேள்வியால்
வணங்கும் ஏனையோர்
ஆத்ம வடிவாய்
என்னை ஒன்றாய்,
வேறாய் பலவாய்
தியானம் செய்வர்

ஸ்ரீமத் பகவத்கீதை – அத்:09

# ஞானச்சிதறல்

நானே வேள்வியும்
நானே சடங்கும்
நானே அன்னமும்
நானே அனைத்தும்,

நானே நெய்யும்
நானே யாகத்தீயும்
நானே இருப்பும்
நானே எல்லாமும்,

நானே உலகின்
தாயும் தந்தையும்,
நானே செயல்பலன்
நானே மூவேதமும்,

நானே சாட்சியாம்
நானே அடைக்கலம்
நானே அழிவும்
நானே ஆதாரமும்,

நானே இருப்பும்
நானே காரியமும்
நானே காரணமும்
நானே அழியாவிதை,

ஸ்ரீமத் பகவத்கீதை – அத்:09

# ஞானச்சிதறல்

நானே இருமையும்
நானே இல்லாமையும்
நானே அனைத்தும்
என்றெனை அறியார்,

வேதவழி வாழ்ந்தோரும்
புண்ணியம் தீர்ந்தபின்
மீண்டும் மீண்டும்
பிறப்பரே இப்புவியில்,

எம்மனிதன் எப்போதும்
என்னை வேறாய்க்காணா-
எண்ணமுடன் சிந்தித்தே
என்னிடம் பக்தியுடன்
என்னையே தியானிக்கும்
என்பக்தனின் வாழ்வில்
என்பொறுப்பு யோகக்ஷேமம்
என்றறிவாய் அர்ஜுனா!

எவ்வழிபாடும் என்வழிபாடு
பிறதேவதை வழிபாடும்
விதிவழுவும் வழிபாடும்
என்வழிபாடே அறிவாய்நீ

அர்ஜுனா! எனைவழிபடும்
மனிதர்கள் எனையடைவர்,
மற்றதை வழிபடுவோர்
மற்றதை அடைவர்

ஸ்ரீமத் பகவத்கீதை – அத்:09

# ஞானச்சிதறல்

வேள்விகள் அனைத்திற்கும்
பிரபுவாய் உள்ளேன்
இவ்வுண்மை அறியாதோர்
இவ்வுலகில் பிறப்பரே

தேவர்களைத் தொழுவோர்
தேவர்களை அடைவர்,
மூதாதையரைத் தொழுவோர்
மூதாதையரை அடைவர்,

பூதங்களைத் தொழுவோர்
பூதங்களை அடைவர்,
என்னைத் தொழுபவர்
என்னை அடைவரே

இறைவனுக்கு ஓர்பச்சிலை
இறைவனுக்கு ஓர்பூமலர்
இறைவனுக்கு ஓர்பழம்
இறைவனுக்கு ஓர்துளிஜலம்

யாரெனக்கு அன்புடன்
தூயபுத்தி பக்தியால்
நேசமுடன் அளிப்பதை
பிரியமுடன் உண்பேனே,

# ஞானச்சிதறல்

எதை செய்கிறாயோ
எதை உண்கிறாயோ
எதை தருகிறாயோ
எத்தவம் வேட்கிறாயோ
எனக்கதை அர்ப்பணம்
எனச்செய்வாய் அர்ஜுனா!

புண்ணிய பாவங்கள்
பலன்கள் போக்கியே
பந்தத்தில் வீழாமல்
பாதுகாப்பேன் உன்னையே

பக்தியுடன் தொழுதால்
சான்றோனாய் வாழ்ந்திடுவாய்
பாவியாய் எண்ணிடினும்
வேறாயெனைக் காணாது
பக்தியுடன் எனைத்தொழும்
பக்தனை சாதுவாயறி.

அனைத்து உயிர்களிலும்
சமமாய் வசிப்பவன்நான்
எனக்கு பிரியமானோன்
பிரியமற்றோன் என்பதில்லை.

ஸ்ரீமத் பகவத்கீதை – அத்:09

# ஞானச்சிதறல்

ஆதலால் பக்தியுடன்
அன்புடன் தொழுவோர்
என்னிலே அவர்களும்
அவர்களில் நானுமுளேன்

என்பக்தன் உத்தமனாம்
என்பக்தன் அழிவதில்லை
என்றுசொல் உலகிற்கு
என்றும்சாந்தி உனக்கு.

என்னில் மனதைவைத்திரு
என்னுடை பக்தனென்றிரு
எனையே தொழுதுகொண்டிரு
என்னை மேலாம்கதியாயிரு
எனையே அடைவாய்நிச்சயம்நீ
என்றும்**இருப்பாய் இருப்பாய்**நீ!

"ஞானங்களிலே அரசனாம் உத்தமரகசியம்"
எனும் இவ்வொன்பதாம் அத்தியாயம் முற்றிற்று.

ஸ்ரீமத் பகவத்கீதை – அத்:09

## 10-ம் அத்தியாயம்

## ‘விபூதி யோகம்’

## “இறையின் பெருமைகள்”

அர்ஜுனா! தேவ-ரிஷியும்
அறியார்கள் என்பெருமை
அனைத்திற்கும் ஆதிகாரணன்
அகிலத்திற்கு ஈஶ்வரன்
அனாதிநான் தோன்றாதவன்
அறிபவனிதை மயங்கான்
அனாதிபாவங் களற்றான்.

ஆத்மஅறிவும் மனஅமைதியும்
புலனடக்கம் பயமின்மையும்
உயிர்களுக்குத் தோன்றியது
என்னிடமிருந் தென்றறிவாயே

பிரபஞ்சத்தில் பிரஜைகள்
எவருடைய சிருஷ்டியோ
அவ்வேழு முனிவர்களும்
மனுக்கள் நால்வரும்
என்மனத்திலே உதித்தனர்
அறிவாய் தனஞ்ஜயா!

ஸ்ரீமத் பகவத்கீதை - அத்:10

# ஞானச்சிதறல்

என்னுடை மகிமையும்
உண்மையை உள்ளபடி
அறிபவன் எவனோ
அம்மனிதன் அழிவில்லா
அவ்யோகத்துடன் இணைகிறான்
ஐயம்தவிர் அர்ஜுனா!

விஜயன் விளம்பினான்
உம்பெருமையை நாரதரும்
வியாசரும் புகழ்வரே
படைத்து அதைக்காக்கும்
உத்தம புருஷன்நீர்
உம்மைநீர் நன்கறிவீரே

உலகங்கள் உம்விபூதியாம்
அவைதமை அறியஅவா
அவைகளை வர்ணிக்க
தாங்களே தகுதியுடையீர்!

யோகிகள் உணர்வார்கள்
ஞானத்தில் தியானத்தில்,
எவ்விதம் நானறிவேன்
விரிவாகப் பகர்வீர்!
அமிர்தமொழி கேட்கஅவா
அகிலம்காக்கும் அச்சுதனே!

ஸ்ரீமத் பகவத்கீதை – அத்:10

# ஞானச்சிதறல்

நல்லது தனஞ்ஜயா!
என்பெருமை பெரிது
விளக்குவது அரிது
இருப்பினும் பகர்வேன்
ஒருசில மகிமைகளை
கேட்பாயே கவனமாய்,

உயிர்களின் உள்ளத்தில்
உறையும் ஆத்மாநான்
அவைகளின் துவக்கநடுவு-
முடிவிலும் உள்ளேன்நான்.

நான்விஷ்ணு ஆதித்தியர்களில்
நான்பானு ஒளிர்பவைகளில்
நான்மரீசி மருத்துக்களில்
நான்நிலா நட்சத்திரங்களில்,

நான்சாமவேதம் வேதங்களில்
நான்தேவேந்திரன் தேவர்களில்
நான்மனம் இந்திரியங்களில்
நான்அறிபவன் உயிர்களில்,

நான்சங்கரன் ருத்திரர்களில்
நான்–குபேரன் தேவயட்சர்களில்
நான்அக்னிதேவன் வசுக்களில்
நானேமேருமலை மலைகளில்,

# ஞானச்சிதறல்

புரோகிதர்களில் ப்ரகஸ்பதிநான்
சேனாபதிகளில் கந்தன்நான்
நீர்நிலைகளில் கடல்நான்
மகரிஷிகளில் ப்ருகுநான்,

ஓங்காரம்நான் ஓரெழுத்தில்
ஜபவேள்விநான் வேள்விகளில்
இமயம்நான் அசையாதவற்றில்
அரசம்நான் மரங்களிலே,

கந்தர்வர்களில் சித்திரரதன்
சித்தர்களில் கபிலமுனி
யானைகளில் ஐராவதம்நான்
ரிஷிகளில் நாரதர்நான்,

அமிர்தம் கடைந்தபொழுது
தோன்றிய உச்சைசிரவஸ்நான்,
மனிதர்களில் மன்னன்நான்
ஆயுதத்தில் வஜ்ராயுதம்நான்,

வசுக்களில் காமதேனுநான்
மனம்மயக்கும் மன்மதன்நான்
சர்ப்பங்களில் வாசுகிநான்
நாகங்களில் அனந்தன்நான்,

ஸ்ரீமத் பகவத்கீதை - அத்:10

# ஞானச்சிதறல்

ஜலதேவதை வருணன்நான்
பித்ருக்களில் அர்யமாநான்
அடக்கி ஆள்பவர்களில்-
யமராஜனாய் உளேன்நான்,

நான்ப்ரஹலாதன் அசுரர்களுள்
நான்காலன் நீக்குபவர்களுள்
நான்சிங்கம் மிருகங்களுள்
நான்கருடன் பறவைகளுள்,

நான்காற்று தூய்மைசெய்பவைகளுள்
நான்ராமன் ஆயுதம்தாங்குபவரில்
நான்மீன்களுள் மகரமாயுளேன்
நான்கங்கை ஜீவநதிகளுள்,

வித்யைகளுள் ஆத்மவித்யைநான்
வாதம்செய்பவரில் வாதம்நான்
தோன்றி யுள்ளவைகளின்-
துவக்கம்இடை முடிவும்நானே,

எழுத்துக்களுள் அகரம்நான்
தொகைகளுள் உம்மைத்தொகைநான்
எங்கும்முகம், கொடுப்பவனும்நான்
முடிவில்லா காலனும்நானே,

ஸ்ரீமத் பகவத்கீதை – அத்:10

# ஞானச்சிதறல்

அனைத்தையும் அபகரிக்கும்
மரணதேவனாய் உளேன்நான்,
செல்வங்களை அடைபவரின்
வளர்செல்வமாய் உளேன்நான்,

பெண்களின்புகழும் திருவும்
வாக்சக்திநினைவுத் திறனும்
அறிவுசக்தியும் துணிவும்
பொறுமையாயும் நான்உளேனே,

சாமங்களுள் பிருஹத்சாமம்
சந்தஸ்களுள் காயத்ரீநான்
காலங்களில் வசந்தகாலம்
மாதங்களில் மார்கழிநான்,

நான்வஞ்சனைகளுள் சூதாட்டம்
நான்தேஜஸ்விகளுள் தேஜஸ்
நான்சாத்வீகரில் சத்துவகுணம்
நானேவெற்றியும் தீர்மானமும்,

வாசுதேவன்நான் வ்ருஷ்ணிகுலத்திலே
தனஞ்ஜயன்நான் பாண்டவர்களிலே
வியாசர்நான் முனிவர்களிலே
சுக்கிரன்நான் கவிகளிலே,

ஸ்ரீமத் பகவத்கீதை - அத்:10

# ஞானச்சிதறல்

ஒழுங்குசெய்வோரில் அடக்கும்சக்தி
வெற்றிவிரும்புவோரில் நீதிநான்
ரகஸ்யமானவையில் மௌனம்நான்
ஞானமுடையோரில் ஞானம்நான்,

உயிர்களுக்கு விதைநானே
இயங்குவது இயங்காத-
வஸ்துக்களெலாம் எவைகளோ-
அவைகளை இல்லையென்றறி
எனைவிடுத்து எதுவுமே
இல்லையென்று அறிந்திடுவாய்,

என்விபூதிக்கு எல்லையில்லை
ஆயினும் விபூதிவிரிவை-
ஏகதேசமாய் ஓரளவே
பகர்ந்தேன் குந்திமகனே!

திருவையும் பெருமையையும்
எவ்வஸ்து உடையதாயுளதோ
அவைகளெல்லாம் என்ஒளியின்-
ஓர்அம்சத்தில் தோன்றியவையே,

மற்றுமோர் விதமாய்க்கூறிடில்
இவ்வறிவால் உனக்காவதென்?
பார்முழுதையும் ஓர்அம்சத்தால்
தாங்குகின்றேன் காண்அர்ஜுனா

ஸ்ரீமத் பகவத்கீதை – அத்:10

# ஞானச்சிதறல்

பாரென்பதும் பஞ்சபூதமாம்
உள்ளதெல்லாம் பஞ்சபூதமாம்
அவைதம்இருப்பும் என்சொரூபமாம்
அவைதம்புகழும் என்சொரூபமாம்

தோன்றியதனைத்தும் என்னிலே
தோன்றியதில்லைநான் என்றுமே
காண்பதெல்லாம் என்விபூதி
உன்அனுபவம் என்விபூதியே!

"இறையின் பெருமைகள்"
எனும் இப்பத்தாம் அத்தியாயம் முற்றிற்று.

## 11-ம் அத்தியாயம்

## ‘விஸ்வரூபதர்ஶன யோகம்’
## “பிரபஞ்சவடிவாய்க் காணுதல்”

காண்பதெல்லாம் என்ரூபம்
கண்அறியாது என்சொரூபம்
பார்ப்பதனைத்தும் பழுதுபடும்
பார்க்கின்றஎனக்கு பழுதேது?

பார்க்கப்படுவது அனைத்தும்
பார்ப்பவனால் பார்க்கப்படும்
பார்ப்பவனைப் பார்க்கவியலாதே
பார்ப்பவனையன்றி வேறேது?

தாமரைக் கண்ணா!
அழிவில்லாஉன் மகிமையும்
உயிர்களின் தோற்றமறைவும்
விரிவாகநான் கண்டுணர்ந்தேன்.

எனக்கனுக்கிரகம் செயவேண்டி
எவ்வாத்மஅநாத்ம விவேகம்
நீரெனக்கு விளம்பினீரோ
அதனால்மோகம் விலகியதே

# ஞானச்சிதறல்

யோகேஶ்வரா! புருஷோத்தமா!
உம்பெருமைதனை அறிந்தேனே
இச்சிக்கின்றேன் தங்களைநீர்
எவ்விதம் வர்ணித்தீரோ
அவ்விதம் உம்ஈஶ்வர
வடிவம்தனைக் காணஅவா!

அழிவில்லா அவ்வடிவை
காணவியலும் எனத்தாங்கள்
கருதினால் காட்டியருள்வீர்
பிரபஞ்சத்தின் நாயகரே!

**ஸ்ரீபகவான் பகர்ந்தார்:**
பாரென் தெய்வீகஅருளை
பலவிதவர்ண ரூபங்களை
நூறாயிரமாய் உள்ளதை
அசையும்அசையா உலகை
இன்னும்வேறெதை யெதைக்காண
இச்சிப்பாயோ அதனையும்காண்

உன்னுடை ஊனக்கண்ணால்
எனைக்காண இயலாது
உனக்கதனால் தெய்வீக
கண்களை அருளுகின்றேன்
என்னுடை யோகேஶ்வர
மகிமையைக் காணவே!

# ஞானச்சிதறல்

**ஸஞ்ஜயன் விளம்பினான் :**

பகவான் விஶ்வரூபம்காட்ட
வில்விஜயன் வியந்துகண்டான்
விஶ்வருபம் விண்ணில்தோன்ற
ஆயிரம் கதிரவன்போல்
தெய்வீகஒளி எங்கும்பரவ
பிரகாசமாய்த் தோன்றினாரே!

இறைவா! என்றோலமிட்டு
இருகரம் சிரம்உயர்த்தி
தானுமதைக் கூறினான்
பரதகுலக் காண்டீபன்

ப்ரம்மனும் தங்களுள்
வீற்றிருக்கக் காண்கிறேன்
தேவர்களோ கைவணங்கித்
துதிபாடக் காண்கிறேன்

உயிர்கள் உலாவுகின்றன
உலகும் உலாவுகிறது
அடிமுடியும் காணலில்லை
அதிப்பிரகாசம் உம்மகுடம்
அழிவில்லா பரம்பொருள்நீர்
அறியத்தக்க வரும்நீரே!

# ஞானச்சிதறல்

தர்மங்கள் தழைப்பதும்
பானுசந்திரன் ஒளிர்வதும்
மூவுலகம் சுழல்வதும்
உம்மிடத்தில் பார்க்கிறேன்

பயத்தால் நடுங்குகிறேன்
ஆதியந்தம் நடுவுமில்லா
சொரூபமாய் உளீர்நீர்
அளவில்லா சக்தியும்
என்றுமுள பரம்பொருளும்
நீரென்பது என்கருத்தாம்

அச்சத்தால் தேவர்கள்தொழ
முனிசித்தர்கள் புகழ்பாட
அஶ்வினிவசுக்கள் வணங்க
ருத்ராதித்யர் மகிழ்ந்திருக்க,

புலன்களெங்கும் பரந்திருக்க
விண்ணையும் மண்ணையும்
அளந்த வாமனரே!உம்மை
பிரபஞ்சமாய்க் காண்கின்றேனே

திசைகளுக்கு ஆதாரம்நீர்
புவனத்திற்கு ஆதாரம்நீர்
மிககோரமாய் மாறுகிறீர்
உம்மைக்காண இயலவில்லை

ஸ்ரீமத் பகவத்கீதை – அத்:11

# ஞானச்சிதறல்

என்மனம் நடுங்குகிறதே
என்நாதமு தழுக்கிறதே
தீயில்வீழும் விட்டில்பூச்சிபோல்
உன்னுள் வீழ்ந்தனைவரும்
மறைகின்றனரே கிருஷ்ணா!
தப்பிச்செல்ல வழியின்றியே
காலனும்உள் புகுகின்றானே
காலனுக்கும் காலனாயுள்ளீர்

பகவானே தாங்கள்
உக்ரஒளி யாயுளீர்
பயங்கர ரூபம்நீர்
தாம்யாரென்று எனக்கு
உண்மையை உரைப்பீரே
உம்செயல் புரியவில்லை
உன்சரணம் புகுந்தேன்
அருள்வீர் பரந்தாமா!

**பரந்தாமன் பகர்ந்தான் :**
உலகையழிக்கும் காலன்நான்
தீயரையழிக்கும் செயல்நான்
எதிர்நிற்கும் சேனைவீரர்கள்
நீயிலாவிடினும் அவர்கள்
அனைவரும் அழிவர்திண்ணம்
எழுந்துஉன் கடமையாற்று
பேறும்புகழும் பெறுவாய்நீ

# ஞானச்சிதறல்

அதர்மிகளை வென்றுஅவர்
அரசைப்பெற்று மகிழ்வாயே
அவர்கள்முன்பே காலத்தாலே
அழைத்துச்செல்லப் பட்டவர்கள்

குலகுரு துரோணரையும்,
இச்சித்து மரணமுடை-
பிதாமகர் பீஷ்மரையும்,
பயமறியா ஜயத்ரதன்-
கர்ணனையும் பிறரையும்
வீழ்த்துவாய் விஜயனே!

அஞ்சுவது பேதைமை
அஞ்சாது போர்புரிவாய்
நீயோர் நிமித்தகாரணன்
நிச்சயம் வெற்றிஉனக்கு.

**விஜயன் விளம்பினான் :**
நண்பனும் ஆத்மாவும்நீர்
உயிர்களில் உறைபவரும்நீர்
அனைத்திலும் உயர்ந்தவர்நீர்
முழுமுதற் கடவுளாம்நீர்

மூலாதார சொரூபனும்நீர்
முழுஅன்பும் பெருமையும்நீர்
கருணையே வடிவாம்நீர்
உம்மைநான் வணங்குகிறேன்

# ஞானச்சிதறல்

உம்பெருமையை அறியாநான்
உளறினேன் பலவிதமாய்
உண்மைதனை உணராமலே
உமைத்தோழனாய் எண்ணியேநான்
கருத்திலே கவனமின்றி
வேடிக்கையாய் எள்ளிநகைத்தேன்

வசைகள்பல பாடினேன்
உண்ணுகின்ற பொழுதும்
சேர்ந்துறங்கிய போதும்
கூடிவிளையாடிய போதும்

உம்மை பலவிதமாய்
ஏளனம் பலசெய்தும்
எதிர்வாதம் புரிந்தேன்,
அன்புடன் அச்சுதனே!
அவமதித்த எல்லாம்
அருள்கூர்ந்து மன்னிப்பாயே

அசைவதும் அசையாததும்நீர்
நகர்வதும் நகராததும்நீர்
மூவுலகிற்கும் தந்தைநீர்
எனப்பகர்ந்து குந்திமகன்

தண்டம்போல் நெடிதுவீழ்ந்து
தரைதனில் தலைவணங்கி
இருகரம் சென்னியுயர்த்தி
கண்ணீர்மல்கக் கதறினானே,

ஸ்ரீமத் பகவத்கீதை – அத்:11

# ஞானச்சிதறல்

கண்ணா! கார்முகில்வண்ணா!
பொறுத்தருள் பொறுத்தருள்
மகனுக்குத் தந்தைபோல்
தோழனுக்குத் தோழன்போல்,

காதலிக்கு அன்பன்போல்
என்குற்றங்கள் மன்னிப்பாய்
கருணையால் குற்றங்கள்
களைந்துகாப்பீர் கண்ணா!

தங்களைக்கண்டு என்மனம்
மகிழ்ச்சியில் திளைக்கிறது
முன்காணா வடிவம்கண்டேன்
இறைவனே! இருப்பினும்
பயத்தாலே நடுங்குகிறேன்
அகிலத்தின் உறைவிடமே
முன்புபோல் நாற்கரமுடன்
முன்வடிவை காட்டிஅருள்வீர்.

**பகவான் பகர்ந்தார் :**
குருவம்சத்து குடாகேசா!
அருள்புரியவே உனக்கு
அவ்விஸ்வரூபம் காட்டினேன்
ஆதியந்தம் இல்லாத
பிரகாசமும் எல்லாமான
அவ்வடிவம் உனைத்தவிர
வேறொருவரும் கண்டதில்லை
இப்புவியில் என்றுமே!

ஸ்ரீமத் பகவத்கீதை – அத்:11

# ஞானச்சிதறல்

இம்மனித உலகிலே
வேள்விகள் செய்வதாலோ,
வேதம் ஓதுவதாலோ,
தானத்தாலோ தவத்தாலோ,
உன்னையன்றி எவராலும்,
காணஇயலா தோன்நான்.

கோரரூபம் கண்டஉனக்கு
கலங்கும் மனம்வேண்டா!
பயம்நீங்கி மனம்மகிழ்ந்து
முன்வடிவம் மீண்டும்காண்பாயே.

பார்ப்பதற்கு அரிதாம்
என்வடிவம் காணவேண்டி
தேவர்கள் அனைவரும்
ஆவலுடன் இருப்பர்!

எனைஎவ்விதம் கண்டாயோ
அவ்விதம்நான் வேதத்தாலும்
தவத்தாலும் பூஜையாலும்
தானத்தாலும் காணப்படேன்

எதிரிகளை வாட்டுபவனே!
அநந்ய பக்தியாலே
என்னுடை இச்சொரூபம்
உள்ளபடி அறியவும்
என்னிலே கலந்திருக்கவும்
இயலுமே குந்திமகனே!

ஸ்ரீமத் பகவத்கீதை – அத்:11

# ஞானச்சிதறல்

உயிர்களிடம் பகைவிலக்கி
பற்றின்றி என்பொருட்டு
செயல்களை நன்றிக்கடனாய்
நன்கியற்றுவோன் எவனோ
உயர்கதிஅடை வான்என்பக்தன்
அவனேபக்தன் என்பக்தன்!

விஶ்வவியாபகன் நானே
விஶ்வாதாரனும் நானே
விஶ்வரூபனும் நானே
கண்ணனாய்த் தோன்றினேனே!

“பிரபஞ்சவடிவாய்க் காணுதல்”
எனும் இப்பதினொன்றாம் அத்தியாயம் முற்றிற்று.

## 12-ம் அத்தியாயம்

## ‘பக்தியோகம்’
## “பக்தியும் பக்தனும்”

பக்தியும் ஒருபாதை
பக்தியோ ஞானபாதை
பக்தனுக்கு உத்தமபக்தி
அதற்குத்தேவை பராபக்தி

உத்தமபக்திக் குயர்குணம்
அக்குணத்திற்கு பக்தியோகம்
உதாரணத்திற்கு ஓர்குணம்
உத்தமக்கருணை அக்குணம்.

பரந்தபன் பகர்ந்தான்
பக்தியில் உயர்ந்தது
சகுணமா நிர்குணமா
எதுவென்று சொல்கண்ணா.

மனதை நன்கிருத்தி
என்னிட மதையிருத்தி
நம்பியே தொழுமவன்
யோகத்திலே சிறந்தோன்!

# ஞானச்சிதறல்

பக்தியில் பலப்பலநிலை
உயர்ந்ததோ அக்ஷரநிலை
மாறுதலில்லா பக்தியுடன்
கூடஸ்த உபா சனைசெய்,

**இந்நிலை தவறிடில் . . . .**
ஐந்தடக்கம் செய்தால்
ஐயமின்றி வாழலாம்,
ஆறடக்கம் செய்தால்
ஆதரவின்றி வாழலாம்,
ஏழடக்கம் செய்தால்
எழுச்சியோடு வாழலாம்,
எட்டடக்கம் செய்தால்
எல்லைகடந்து வாழலாம்.

**ஈஸ்வரபக்தி கடினமேல் . . . .**
செயலனைத்தும் அர்ப்பணித்து
லட்சியமாய் எனைத்தொழுது
தியானத்திலே நிலைத்திடு
சம்சாரத்தை நீகடந்திடு,

**இல்லையேல் . . . .**
இடைவிடாத பயிற்சியால்
இலகுவாய் மனதையிருத்தி
இப்புத்தியை நெறிப்படுத்தி
இருப்பாய் என்னிடத்திலே,

# ஞானச்சிதறல்

**அனைத்துப் பயிற்சியினும் . . . .**
ஞானம்என்றும் உயர்ந்தது
அதனினும் தியானமாம்
தியானத்தினும் பலத்தியாகம்
தியாகத்தின் முடிபுசாந்தியாம்.

**பக்திநிலை எய்திட . . . .**
பண்புகள் பலப்பல
நட்புடன் கருணையும்
வெறுக்காத மனமும்
அதிலொன்று காண்பாயே!

யான்எனது இரண்டுமற்று
இன்பதுன்பம் சமமாயெண்ணி
மன்னிக்கும் மனமடைந்திடில்
மாமுனியாம் மூவுலகிலவன்,
**“அப்பக்தன் எனக்குப்பிரியன்”**

அச்சமும் கோபமும்
கவலையும் நீங்கிடில்
உலகத் துன்பமும்
நில்லாது ஓடிடும்,
**“அப்பக்தன் எனக்குப்பிரியன்”**

ஸ்ரீமத் பகவத்கீதை – அத்:12

# ஞானச்சிதறல்

தேவைகளில்லா தூயவன்
பற்றுதலில்லா பாமரன்
ஆரவாரமில்லா அன்புடன்
செயலெல்லாம் துறந்தவன்,
**“அப்பக்தன் எனக்குப்பிரியன்”**

நன்மை தீமையை
துறந்து விட்டான்
மகிழ்ச்சி துயரம்
தொலைத்து விட்டான்,
**“அப்பக்தன் எனக்குப்பிரியன்”**

நண்பனும் எதிரியும்
குளிரும் வெப்பமும்
இன்பமும் துன்பமும்
எனக்கில்லை சிறிதும்
என்றே இருப்பான்
எப்போதும் ஓர்நிலையில்,
**“அப்பக்தன் எனக்குப்பிரியன்”**

உயர்வும் தாழ்வும்
இசையும் வசையும்
எவனுக்குச் சமமோ
அவனுக்கு அமைதியாம்.

ஸ்ரீமத் பகவத்கீதை – அத்:12

# ஞானச்சிதறல்

அவனே  பக்தனாம்
அவனே  முக்தனாம்
துறந்தேன்  என்பதையும்
துறந்தோன்  உயர்துறவியாம்!
**“அப்பக்தன்  எனக்குப்பிரியன்”**

உயர்பக்தியினைப்  பகர்ந்தேன்
உயர்சிந்தனையுடன்  பயின்று
உலகாய்க்காண்பாய்  பார்த்தா!
உயர்வாயெனையே  பார்ப்பாய்நீ

“பக்தியும் பக்தனும்”
எனும் இப்பன்னிரண்டாம் அத்தியாயம் முற்றிற்று.

## 13-ம் அத்தியாயம்

## ‘க்ஷேத்ரக்ஷேத்ரக்ஞ விபாக யோகம்’
## “ஜட-சைதன்யம் பகுத்தாராய்தல்”

விளைநிலம்போல் உடல்களாம்
அதைஆள்பவனே அதைஅறிபவனாம்
உடலினுள் எனைஅறிவாய்
உடலதில் உறைபவனையும்
உள்ளதையறியும் அறிவெதுவோ
அதுவேஞானம் இதுஎன்தீர்மானம்
அஞ்ஞானம்யாது எத்தகையது
எனசுருக்கமாய் உரைப்பேன்கேள்.

உண்மைஉன்னி லுமுள்ளது
உண்மையை உணரவே
உலகம் உதவியது
உண்மையோ எங்குமுளது
உண்மையை உணர்பவன்
உலகிற்கு உதவுவான்.

# ஞானச்சிதறல்

முனிவர்கள் உபநிஷத்தில்
பெருமையுடன் பாடியுளர்
அறிபவன் அறியப்படான்
அறிபவை தனையறியா
அறியப்படுவது ப்ரகிருதி
அறிபவன் மேலாம்ப்ரகிருதி.

உடலை உணர்ந்தவன்
உள்ளத்தில் உயர்ந்தவன்
உடல்தான் விளைநிலம் (க்ஷேத்ரம்),
உடலை அறியுமறிவை
அறிபவனே அறிபவனாம்
அவனே க்ஷேத்ரக்ஞனாம்.

அறியப்படுவதோ ஆயிரம்
அதிலடங்கும் உன்னுடைசரீரம்
கவனித்தாலது நன்குபுரியும்
உண்மைநிலை உனக்குத்தெரியும்

ப்ரகிருதி தத்துவங்கள்
இருபத்து நான்கென்பர்
தனித்தி வைகளுக்கு
இருப்பில்லை என்பரே
தனையறியா ஜடமவை
அவைக்குப்பெயர் க்ஷேத்திரமாம்.

ஸ்ரீமத் பகவத்கீதை – அத்:13

# ஞானச்சிதறல்

உள்ளமதில்ஊனக்   கண்உறைந்திட்டதோ
உண்மையைமாயை   தான்மறைத்திட்டதோ
மாயைநோய்குண   மாகபத்தியமும்,
மருந்தும்அவசியம்   என்றறிவாய்நீ.

அறியாமைஎன்   னும்நோய்க்கு
அவசியம்என்   றும்பத்தியம்
பத்தியம்   பலப்பலஉளது
மருந்தோஒன்   றுதானுளது.

அகங்காரம்   தற்பெருமையின்மை
அகிம்சைஎன   பலபத்தியம்
அஜ்ஞானம்   பூரணமாய்விலகிட
ஆங்கொருமருந்து   பூரணஞானம்

ஞானம்தன்னில்   ஸ்திரம்பெற
குணங்கள்தான்   பத்தியம்
ஞானம்தான்   மலர்ந்திட
மாயைநோய்   மறைந்திடும்,

# ஞானச்சிதறல்

குணங்கள்தனை பெற்றிடவே
குருவின்அருளை வேண்டிடுவோம்
குணங்கள்தான் உதவிடுமே
குணவான்தெளி வான்ஞானத்தால்
குணங்கள் பற்றிக்கூறுவேன்
குறிப்பிலிருத்தி குணவானாவாய்.

பணிவுஎளிமை அகிம்சை
நேர்மைதூய்மை உறுதியுமே
குணவானின் குணங்களிவை
குருவிற்குத் தொண்டுகள்செய்து,

பணிந்துநின்று பற்றுவிட்டு
பண்புஓங்க ஞானம்கேட்டால்
பண்புகள்கடந்த பரமகுரு
பரனைக்காட்டுவான் பரந்தப!

ஐம்புலனை உள்ளடக்கி
அகங்காரம் தனைவிலக்கி
பிறப்பிறப்பு, பிணிமூப்புதனை
துன்பத்தின் மூலமென்றறிந்து
பண்புகளை வளர்த்திடுவாய்
விராகத்தால் பகுத்தறிவாய்.

ஸ்ரீமத் பகவத்கீதை - அத்:13

# ஞானச்சிதறல்

காலத்தில்காலன் உனை
அழைத்திடும் பொழுது
வீதியில்உடன் வரும்
உறவுகள் அனைத்தும்

உடை கோவணம்
இலாது கிடத்தி
கலங்கியே தீமூட்டி
கலைந்திடுவர் பாராமல்

உருவியது கண்டும்
உறங்கிடும் மனமே!
இனியும் பிறக்கவே
இசைவையோ மனமே!

பற்றுதனைப் பாரிலே
பட்டென்று விட்டுவிட்டு
பரமனைப் பரகதியாய்
பார்த்திரு பாமரனே!

எதையும் எண்ணாத
ஏகாந்த யோகத்தால்
பயமின்றி நாடுவாய்,
பற்றுக் கூட்டமில்லா
கூட்டத்தில் உடன்நீ
இணைவாய் பக்தனே.

ஸ்ரீமத் பகவத்கீதை – அத்:13

# ஞானச்சிதறல்

அநந்ய பக்தியை
உறுதியாய்ப் பழகுவாய்
மகிழ்ச்சியில் திளைத்திடுவாய்
எல்லைதனைக் கடந்திடுவாய்!
அறியத்தக்கது அறிவாய்!
அமரநிலை எய்திடுவாய்!

ப்ரம்மனாய் இருந்திடுவாய்
பேரானந்தம் அடைந்திடுவாய்
அனைத்திலும் மிளிர்ந்திடுவாய்
அதுசொரூபம் அறிந்திடுவாய்!

குணங்கள் அனைத்துமே
குணங்களோடு சேர்ந்திடும்
குணங்கள் அற்றநீயோ
சேருவாய் எதனுடன்?

அகமும் புறமும்
நீக்கமற இருப்பாய்
அருகில் தூரத்தில்
எங்கும்நீ இருப்பாய்,

இருளை விலக்கும்
ஒளிக்கு ஒளியாம்
அறிவிற்கு அறிவாய்
அனந்தமாய் இருப்பாய்,

# ஞானச்சிதறல்

இவ்விதமே உந்தனை
இறையென உணர்ந்தால்
உண்மையாய் என்றுமுள
உன்னில் கலந்திடலாம்.

காரணமும் கார்யமும்
என்ப்ரகிருதி அன்றோ
காரணமிலா புருஷன்
நானென்று அறிவாயே
உள்ளிருந்து காண்பவன்நான்
அனுபவிக்கும் ஆதாரம்நான்,

எல்லோர் உள்ளத்திலும்
சாட்சியாய் உறைகின்றேன்
ஈஶ்வரனாய் எனைப்பகர்வர்
எனைதான் இல்லையென்று
எண்ணிடாதே என்றும்நீ
என்னருமை அர்ஜுனா!

உடலைப்பகுத்து அறிந்து
நன்றாய்த் தெளிந்திட்டால்
மீண்டுமே பிறந்திடாய்
இப்புவியில் என்றுமே.

ஸ்ரீமத் பகவத்கீதை – அத்:13

# ஞானச்சிதறல்

யோகத்திலும் காணலாம்
தியானத்திலும் காணலாம்
ஞானத்தாலுடன் காணலாம்
சிரத்தையுடன் பக்தியால்
அடைக்கலம் அடைந்திட்டால்
மரணத்தையும் கடக்கலாம்,

ஜடத்தில் மாறுதல்கள்
என்றும் நிலையிருக்கும்
அசைவில்லா அறிவு
என்றும் நிலைத்திருக்கும்.

அறிபடுவது நீயல்ல
அறிபவனும் நீயல்ல
அறிவாயும் நீயல்ல
அறிபவனை அறியும்
அறிவே என்றும்நீ
அறிவாய் நீயுளாய்!

அறிவின்றி வேறல்லநீ
உலகம் என்றஒன்று
எங்குமில்லை காண்பாய்நீ
உலத்தைக் கண்டிடில்
உள்ளதாய்க் காட்டிடும்
மாயையெனும் அப்பேய்.

ஸ்ரீமத் பகவத்கீதை – அத்:13

# ஞானச்சிதறல்

ஜட-சேதனம் சேர்ந்தால்
இயக்கம் தோன்றிடுமே
உலகாய் கண்டிடில்
இயக்கங்கள் தென்படும்
தோற்றமாய்க் கண்டிடிலோ
பிரம்மனாய்த் தோன்றிடும்.

அனைத்துயிரும் என்உயிராம்
அனைத்தறிவும் என்அறிவாம்
அழிவில்லாப்பரம் பொருள்நான்
அதையறிந்தால் நீயும்நானே!

அப்ப்ரம்மம் இருப்பாயுளது
அப்ப்ரம்மம் ஒளிர்விப்பது
அப்ப்ரம்மம் எங்கும்செல்லாது
அப்ப்ரம்மம் எங்கும்சாக்ஷியாம்.

உலகிற்குஓர் சூரியன்போல்
ப்ரகிருதிக்கோர் புருஷன்!
அவனைஅறி க்ஷேத்ரக்ஞனாய்
அவனேநீயென! நீயேஅவனென!

"ஜட-சைதன்யம் பகுத்தாராய்தல்"
எனும் இப்பதின்மூன்றாம் அத்தியாயம்

ஸ்ரீமத் பகவத்கீதை - அத்:13

## 14-ம் அத்தியாயம்

## ‘குணத்ரயவிபாக யோகம்’
## “முக்குணங்களை பகுத்துணர்தல்”

இறைவன் இறைவி
இணைந்தே உலகம்
புருஷன் ப்ரகிருதியோ
இணைந்தே இயக்கம்

புருஷனோ ஒன்றுதான்
ப்ரகிருதி பலப்பல
புருஷனோ தூய்மையாம்
ப்ரகிருதியோ அசுத்தமாம்,
தூய்மை குணமற்றதாம்
ப்ரகிருதியோ குணங்களாம்

குணங்களைக் கடந்தால்
நிர்குண சொரூபமாம்
குணங்களோடு கலந்தால்
சகுண சொரூபமாம்.

# ஞானச்சிதறல்

ஆத்மஞானம் பெற்றிட
மீண்டுமுனக்குச் சொல்வேன்
ஞானத்தில் சரணடைதலே,
உண்மைவழியாம் முக்திபெற,

அவ்வழியை அடைந்தோர்
ஆதியில் பிறப்பதில்லை
பிரளயத்தில் அழிவதில்லை
அறிவாயிதை அர்ஜுனா!

உருவாக்குபவள் தாய்
உருவாக்குபவன் தந்தை
மூலப்ரகிருதியே தாய்
பரமபுருஷனே தந்தை.

முக்குணம் பிறந்தது
என்னுடை ப்ரகிருதியில்
தோன்றிய அவைகளே
அழிவில்லா தேகியை
அழிவுடை தேகத்தில்
பந்தம் செய்கிறதே,

இவ்வியக்கம் தன்னில்
இயங்குவதே இவ்வுலகம்
வானவரும் மண்வாழ்-
உயிர்களும் இதிலடக்கம்,

# ஞானச்சிதறல்

சத்துவம் ரஜஸ்தமஸ்
இம்மூன்றும் குணங்கள்,
அமைதியும் அறிவும்
சத்துவ குணமாம்,

சுயநலமும் செயலும்
ராஜச குணமாம்,
தூக்கமும் சோர்வும்
தாமஸ குணமாம்.

அழுக்கின்மை பிரகாசம்
இடரில்லா இன்பம்
அவ்வறிவைப் பற்றினால்
தத்துவமும் பந்தமாமே.

பாவமற்ற பார்த்தனே!
ஆசையும் வேட்கையும்
பற்றுதலும் தோன்றுமிடம்
ரஜோகுணம் என்றறிவாய்
இச்செயல் பற்றினால்
பாவத்தை தந்திடுமே,

# ஞானச்சிதறல்

அறியாமை தோன்றிடும்
தேகியை மறைத்திடும்
உடல் எடுத்தோனை
பந்தத்தில் வீழ்த்தும்
தமோகுணம் என்றறிவாய்
கவனமின்மை மயக்கம்
அவைதம் வெளிப்பாடாம்
அறிந்திடு அர்ஜுனா!

சத்துவம், ரஜஸ்- தமஸ்
இவைதமை என்றும்
அடக்கி மேலெழும்,
ரஜஸ், சத்துவ-தமஸ்
இவைதமை என்றும்
அடக்கி மேலெழும்,

தமஸோ, சத்துவ-ரஜஸ்
இவைதமை என்றும்
அடக்கி மேலெழும்.
பரதகுலக் காளையே!

ஸ்ரீமத் பகவத்கீதை - அத்:14

# ஞானச்சிதறல்

மனமும் ஐம்பசுவும்
அடங்கில் **சத்வஞானம்**
பிரகாசமாய்ப் பெருகுமே,
பிறர்பொருளில் ஆசை
புலன்களில் நாட்டமும்
செயலில் ஈடுபாடும்
ஓங்கிடில் **ரஜோகுணம்**
தோன்றிப் பெருகிடும்,

சோம்பல் முயற்சியின்மை,
மயக்கம் கவனமின்மை
இருளாம் **தாமஸகுணம்**
தந்திடுமே தனஞ்ஜயா!

இவ்வுலகமே முக்குணமாம்
மனிதவுடல் எடுத்தோன்
சத்துவத்தைப் பயின்றால்
உயருலகம் உற்றிடுவான்,

ரஜோகுணத்தைப் பயின்றிடில்
கர்மபூமியில் களைத்திடுவான்,
தமோகுணத்தை வளர்த்திடில்
கீழ்நிலையில் பிறந்திடுவான்.

குணங்களினும் வேறாயெனை
செயல்களினும் மாறாயெனை
எவனறிவானோ அவனே
என்சொரூபம் ஆவானே!

ஸ்ரீமத் பகவத்கீதை – அத்:14

# ஞானச்சிதறல்

உடலுக்குக் காரணம்
இம்மூன்று குணங்களும்,
அவைதமைக் கடந்து
பிறப்பிறப்பு மூப்பு
துக்கத்தினின்று விடுபட்டோன்
பிறவாமை அடைகின்றான்.

**பார்த்தன் புகன்றான் :**
பகவானே இம்மூன்று
குணங்களைக் கடந்தோன்
எவ்விதம் இருப்பான்?
எவ்விதம் நடப்பான்?

**பகவான் பகர்ந்தார் :**
சத்துவ ரஜஸ்தமோ
செயற்பலன் வந்திட்டால்
விருப்பும் வெறுப்பும்
என்றுமடை யான்அவன்

உதாசீனன் போலிருப்பான்
குணத்தால் அசையான்
குணங்கள் செய்கிறதென்றே
சொரூபத்தில் இருப்பானவன்

இன்பதுன்பம் சமமாயும்
மண்கல்பொன் சமமாயும்
புகழிகழ்ச்சி சமமாயும்
மானஅவமானம் சமமாயும்

# ஞானச்சிதறல்

நட்பும்பகையும் சமமாயும்
வேண்டும்வேண்டா என்றிலாது
முயற்சிகளைத் துறந்தவன்
குணங்களைக் கடந்தவனாம்.

**குணாதீதன் அவனே**
**ஜீவன்முக்தன் அவனே!**
**வீழ்வதும் உடல்தானே**
**விதேகமுக்தன் அவனே!**

இயற்கையான இக்குணங்கள்
இறைவனுக்கு இல்லையென்றும்,
இதையுணர்ந்த இம்மனிதன்
இனிபிறப்பதே இல்லையாம்!

பக்தியில் மூழ்கியவன் பராபக்தன்!
முக்குணம் கடந்தவன் மாமுனிவன்!

"முக்குணங்களை பகுத்துணர்தல்"
எனும் இப்பதினான்காம் அத்தியாயம் முற்றிற்று.

ஸ்ரீமத் பகவத்கீதை – அத்:14

# ஞானச்சிதறல்

## 15-ம் அத்தியாயம்

## ‘புருஷோத்தம யோகம்’
## “உத்தமபுருஷன் பரமாத்மா”

**புருஷோத்தமனே புகன்றான்**
**புருஷோத்தமனைப் பற்றியும்...**

மூலமென்று ஒன்றுண்டாம்
ஒன்றுமட்டுமே மூலமென்றான்
உயர்ந்ததோர் மரத்தை
உதாரணமாய்ச் சொன்னான்,

எம்மரம்நாளை வரைநிலாது
என்பதாலது அஸ்வத்தம்
அதன்வேரோ (மூலம்) மேலிருக்க
தண்டுகிளையும் கீழிருக்க
காணவியலாத அம்மூலம்
என்றும்அகப் படாதமூலம்,

அம்மரமே, வலுவாக
வேரூன்றிய சம்சாரம்
அச்சம்சார மரத்தை
முளைக்காமல் செய்திட
பற்றின்மைப் பெருவாளால்
வேரோடு வீழ்த்திடுவாய்

ஸ்ரீமத் பகவத்கீதை - அத்:15

# ஞானச்சிதறல்

வெற்றியைப் பெற்றிடுவாய்
பரமபதம் எய்திடுவாய்
ஆசைகளை வேரோடகற்றி
ஆத்மாவிலே நிலைத்திருந்து,

இருமைகளைக் கடந்தும்
மடமையை நீக்கியவன்
நிச்சயமாய் அடைகிறான்
முக்தியெனும் அழியாபதம்.

ஞாயிறும், திங்களும்
நன்றாய் ஒளிர்ந்தாலும்
என்னுடை ஒளியை
அவைநவின் றிடுமோ
என்நிலை யாதெனில்
ஸ்வயம் பிரகாசநிலை

மூலத்தை அறிந்திட
முயலாத மூடர்கள்
பிறவியில் புகுந்து
செயலெலாம் செய்து
காற்றைச் செலுத்தும்
துருத்தி போல்
காலத்தை வீணாக்கி
வாழ்வரே அவர்.

# ஞானச்சிதறல்

உலகில் தோன்றும்
உயிர்கள் எல்லாம்
என்னுடை அம்சமாய்
ஜீவனாய் உளார்கள்

பிம்பம்தனைச் சார்ந்து
பிரதிபிம்பம் உள்ளதே
பிம்பம்தான் பிரதிபிம்பம்
பிரதிபிம்பம் என்றுமில்லை,

உடலுறையும் உத்தமபுருஷன்
உணர்தற்கெளிதாம் உத்தமபுருஷன்
உற்றுநோக்கியே உள்ளதைநாம்
உள்ளத்தில் உணர்ந்திடலாம்
உண்மைதனை உணர்ந்தவன்
உத்தமபுருஷன் என்றுமவன்.

சூட்சுமத்திலும் சூட்சுமமாம்
உள்ளுறையும் அப்புருஷனை
அறிவதில்லை கண்ணிருந்தும்
அறியாமையால் அம்மூடர்கள்,

அறிவதற்கு ஓர்உபாயம்
அறிவால்அதை அறிந்திட்டால்
அறிவுக்கண்ணும் திறந்திட்டால்
அகத்திலே தெளிந்திடலாம்,

ஸ்ரீமத் பகவத்கீதை – அத்:15

# ஞானச்சிதறல்

சித்திபெற்ற முனியும்
யோகம்செயும் யோகியும்
தன்னில்அவனைக் கண்டும்
தடையில்லா இன்பத்தில்
திளைத்தே இருப்பர்
தினம்தினம் வாழ்விலே.

அவனியில் ஞானம்பெறாது
ஆயிரம்கோடி ஜன்மங்களில்
பெருமுயற்சி செய்திடினும்
பெற்றிடாரே அப்புருஷனை

அகிலத்தை ஒளிர்த்திடும்
ஆதித்திய, மதி,தீயும்
அவைகளோ ஒளிர்ந்திட
ஆத்மஒளி அவசியம்,

உயிர்கள் அனைத்தும்
உலாவ அவைகளில்
உறையும் உத்தமனாய்
உணர்வாய் எனையென்றும்.

நானின்றி அவைகளால்
உடலினில் உட்கொண்ட
உணவுகள் என்றென்றும்
செரிக்காது காண்பாயே,

# ஞானச்சிதறல்

அனைவர் உள்ளத்திலும்
உணர்வாய் உறைகின்றேன்
அறிய வேண்டியது
ஆன்மஒளி தத்துவம்
நானென்று பகரும்
நான்மறை களுமே

மறையாய் உளேன்நான்
மறைமுடிவாய் உளேன்நான்
மறைகளோ எனையென்றும்
கண்டதில்லை காண்டீபா!

நானின்றி மறையுமில்லை
அழிவும்அழியா தன்மையும்நான்
ஆதாரம்,இருப்பாய் உளேன்நான்
விண்மண்எங்கும் நிறைந்துளேனே

பிரபஞ்சம் முழுதும்
பரந்து விரிந்தெங்கும்
புறமகம் கடந்தும்
வேதமது விளம்பும்
உத்தம புருஷனாய்
நன்கெனை அறிந்திடு!

ஸ்ரீமத் பகவத்கீதை – அத்:15

# ஞானச்சிதறல்

**பாவமற்ற பரந்தப!**
வேதாந்தமே விளம்பிடும்
சத்தர்சனம் இதுவே
ஆத்மதர்சனம் இதுவே
ஸ்வாத்மதர்சனம் இதுவே!

"உத்தமபுருஷன் பரமாத்மா"
எனும் இப்பதினைந்தாம் அத்தியாயம் முற்றிற்று.

## 16-ம் அத்தியாயம்

## ‘தெய்வாஸுரஸம்பத் விபாக யோகம்’
## “தெய்வஅசுர பகுத்தறிவு”

மனிதனின் அளவுகோல் மனமாம்
மனத்தின் அளவுகோல் குணமாம்!
குணத்தில் மிகுந்தோன் தெய்வமாம்
குணத்தில் தாழ்ந்தோன் அசுரனாம்!

**அர்ஜுனா! கேள்**
அபயம்தரும் தெய்வகுணம்
அறியாமையால் அசுரகுணம்
இவ்விரண்டையும் அறிந்தால்
அமைதியான மேன்மைவரும்.

அஞ்சாமை ஈகை
புலனடக்கம் தானம்
வேதமோதுதல் வேள்வி
உளத்தூய்மை நேர்மை,

தியாகம் கருணை
சத்தியம் மென்மை
ஞானம் தவம்
அன்பும் பண்பும்,

# ஞானச்சிதறல்

ஆறாய் பெருகும்
வஞ்சனை போக்கி
தைர்யம் பொறுமை
செருக்கின்மை தூய்மை,

அவாவின்மை மனம்தளராமை
அவையனைத்தும் தந்திடும்
தெய்வீக சம்பத்துடன்
பிறந்தவனுக்கு பாரதா!

அக்ஞானம் பெருங்கோபம்
ஆடம்பரம் தற்பெருமை
அசுரகுண சம்பத்துடன்
பிறந்தவனுக்கு பார்த்தனே!

தெய்வீகம் முக்தியினை
அளித்திடும் அறிவாயே
அசுரமோ பந்தந்தை
அளித்திடும் அறிவாயே

அர்ஜுனா! கவலைவேண்டா
தெய்வசம்பத் உளோன்நீ
விரிவாய் தெய்வீகத்தைப்
பகர்ந்தேன் உனக்குநான்

ஸ்ரீமத் பகவத்கீதை – அத்:16

# ஞானச்சிதறல்

இருவிதம் மனிதப்பிறவி
இனிதுநீயும் அறிவாயே
அசுரத்தன்மை சொல்வேன்
கவனமாய்க் கேட்பாயே,

அசுரன் அறியான்
செய்வதும் செயக்கூடாததும்
அகப்புறத் தூய்மையும்
சத்தியமும் இலானவன்,

நல்வினையில்லா அசுரன்
இவ்வுலகமே பொய்யாம்
ஆதாரம் அற்றதாம்
இறையில்லை ஈசன்பொய்,

ஆண்பெண் உறவினாலே
ஆசைதான் ஆதாரமே
வேறுஎன்ன என்பரே
அசுரகுணம் உடையோர்,

உலகநாசம் அறிந்திடார்,
உலகநன்மை புரிந்திடார்
தீமையுமுண்டு தெளிவில்லை
பெருமையுமுண்டு பண்பில்லை,

ஸ்ரீமத் பகவத்கீதை – அத்:16

# ஞானச்சிதறல்

மரணகாலம் வருமென்று
பயந்துபோகம் பண்ணுவர்
ஆசைபூர்த்தி பண்ணவே
அனைத்தும் உள்ளதென்பரே
இங்ஙனம் பகர்வரே
கவலையோடு வாழ்வரே,

அளவில்லா ஆசையெனும்
பாசவலை தளைபட்டு
ஆடல்பாடல் என்றிருந்து
ஆயிரமாய் பிணைகொண்டு,

செலக்கூடா வழிசென்று
செல்வம்தனை திரட்டியே
அளவில்லாப் பொருள்களை
அநியாயமாய் சேர்ப்பரே,

சிற்றின்பமே பேரின்பமென
தீவழியில் அழித்திட்டு
வாழ்வதுவே வாழ்வென
வாழ்வாரே அசுரர்.

இன்றிதை அடைந்தேன்
இனியிதுவும் அடைவேன்
இப்பகைவனை அழித்தேன்
இனிப்பிறரையும் அழிப்பேன்,

ஸ்ரீமத் பகவத்கீதை – அத்:16

# ஞானச்சிதறல்

ஆள்பவன் நானே
அனுபவிப்பவன் நானே
வெல்பவன் நானே
இன்பமாய் இருப்பேனே,

தனவானாய் உளேன்
எனக்குச் சமமாய்
வேறெவன் உள்ளான்
யாகம்பல செய்வேன்
மிகதானம் அளிப்பேன்,
மகிழ்வானே இவ்விதம்.

மாயையெனும் வலையில்
மயங்கியே அறியாமையில்
ஆசையெனும் நுகர்ச்சியில்
அழுந்தியே அசுத்தமாம்
மோகமுடை மனதால்
பாழ்நரகில் வீழ்வரே!

பிறர்அழிவில் சந்தோஷம்
உலகெங்கும் பெருநாசம்
தற்பெருமை தான்பேசி
செருக்குடன் பணிவற்று,

ஸ்ரீமத் பகவத்கீதை – அத்:16

# ஞானச்சிதறல்

பகட்டாக பார்தனில்
பாவம்பல செய்திடுவார்
வேள்விகளை விதிவழுவி
பகட்டாய் பெயரளவில்
பெருமையோடு செய்திடுவார்
எங்குமெனை என்றென்றும்
மீண்டும் மீண்டும்
வெறுப்பரே அசுரர்,

இத்தீயோர் கொடியவர்
மனிதரில் கீழோர்க்கு
அசுரப் பிறவியை
அளிப்பேன் என்றுமே,

பகுத்தறிவு இல்லோராய்
ஒவ்வொரு பிறவியிலும்
எனைவந்து அடையாமல்
கீழ்பிறவியில் பிறப்பரே,

ஆசைகோபம் பேராசை
மூவிதநரக வாயில்
தனக்கழிவைத் தந்திடும்
அவைகளைநீ விடுவாயே,

நரகத்தின் வாயிலாம்
இம்மூன்றில் விடுபட்டோன்
நன்மையுடன் உயர்முக்தியும்
இப்பிறவியில் அடைவரே!

ஸ்ரீமத் பகவத்கீதை – அத்:16

# ஞானச்சிதறல்

வேததர்மம் விலக்கியோன்
ஆசையினால் செயல்படுவோன்
அடைவதில்லை சுகத்தையே
அடைவதில்லை முக்தியையே!

ஆதலால் செயத்தக்கது
செயத் தகாததென்று
நிர்ணயிப்பதில் உனக்கு
**பிரமாணம் வேதமே**

நால்வேதம் வகுத்துள
தர்மத்தை அறிந்திங்கு
கர்மத்தைச் செய்திடுவாய்
வேதகர்மத்தைச் செய்திடுவாய்!

அசுரவியல்பு கடந்திடுவாய்!
தெய்வீகம் அடைந்திடுவாய்!

"தெய்வஅசுர பகுத்தறிவு"
எனும் இப்பதினாறாம் அத்தியாயம் முற்றிற்று.

## 17-ம் அத்தியாயம்

## 'சிரத்தாத்ரயவிபாக யோகம்'
## "மூவிதநம்பிக்கையைப் பகுத்தறிதல்"

சிரத்தையை உடையோர்
ஞானத்தை அடைவர்
சிந்தனை உடையோர்
தெளிவு அடைவர்
தெளிவு உடையோர்
தன்னை அறிவர்
தன்னை அறிபவர்
தானாய் இருப்பரே.

விதியது சாஸ்திரவிதி
விதிவழு வியேசெய்யும்
செயல்எவ் வழிநிற்கும்?
சத்வமா ரஜஸ்தாமஸமா?
விரிவாய் இவைதமை
விளம்புவீர் பரந்தாமா!

அர்ஜுனா! நன்குகேட்டாய்
மூவிதமாய் உள்ளதைப்
பகர்வேன் உனக்கு
கவனமாய் கேட்பாய்

# ஞானச்சிதறல்

வண்டிக்கு வண்டிக்காரன்
தேகத்திற்கு தேகியாம்
குணங்களோ மூவிதம்
சாத்வீகம் ராஜஸம்
தாமஸம் என்றவாறே,
மனதிற்கேற்ப மாறும்
மனிதனின் சுபாவம்
அறிவாயே அர்ஜுனா!

ஜீவர்களின் சிரத்தையது
மனதைச் சார்ந்துளது
யாரெந்த சிரத்தையை
உடையானோ அவன்அப்படியே

தேவர்களை வணங்குபவன்
**சாத்வீக சிரத்தையோன்**
யக்ஷராக்ஷஸரை தொழுவோன்
**ராஜஸ சிரத்தையோன்**
பூதப்பிரேதம் பூஜிப்போன்
**தாமஸ சிரத்தையோன்,**

பகட்டும் பணிவுமின்றி
பற்றுடன் ஆசைகூடி
சாஸ்திரம் விதிவிட்டு
கடும்தவம் செய்வரே,

# ஞானச்சிதறல்

தேகத்தில் இருக்கும்
புலனையும் என்னையும்
துன்புறுத்தும் அறிவிலாரை
அசுரரென அறிவாயே

உணவும் வேள்வியும்
தபஸும் தானமும்
உலகில் மூவிதம்
நீஅறியப் பகர்வேன்

ஆயுள்அறிவு ஆரோக்கியம்
சுகம்ருசி வலிமைதரும்
பசையுளதும் வளர்ப்பதும்
மனிதனுக்கு இன்பம்தரும்
இவ்வுணவுகள் அனைத்துமே
**சத்துவனுக்குப் பிரியமாம்**

கசப்பும் புளிப்பும்
துவர்ப்பும் உவர்ப்பும்
காரமும் உஷ்ணமும்
துன்பமும் ரோகமும்
அளித்திடும் உணவுகள்
**ராஜஸனுக்குப் பிரியமாம்**

ஸ்ரீமத் பகவத்கீதை – அத்:17

# ஞானச்சிதறல்

பாதிவெந்தும் சுவையற்றதும்
பழையதும் காலம்சென்றதும்
அழுகியதும் துர்நாற்றமும்
எச்சிலுடன் தூய்மையற்ற
உணவுகள் அனைத்துமே
**தாமஸனுக்குப் பிரியமாம்;**

பலனை விரும்பாது
மனம்நல் நிலைப்பட்டு
வேதம் விதித்தபடி
வேள்விகளைச் செய்வது
**சாத்வீக வேள்வியென**
என்றும்நீ அறிவாயே

பலனை விரும்பியே
தற்பெருமை தேடியே
செயப்படும் வேள்வியை
**ராஜஸமென அறிவாயே**

வேதநெறியை வழுவியே
அன்னமும் மந்திரமும்
தக்ஷிணையும் இன்றியே
சிரத்தையற்று கடனாய்
செயப்படும் வேள்வியை
**தாமஸமென அறிவாயே;**

# ஞானச்சிதறல்

அந்தண தேவர்கள்
சத்குரு ஞானிகள்
இவர்களைத் தொழுதல்
நேர்மை தூய்மை
தீமைகளைச் செயாமை
இவைகள் அனைத்துமே
**உடலின் தவமென**
என்றும்நீ அறிவாயே

பிறர்மனம் நோகாமல்
ஹிதத்தை அளிக்கும்
உண்மையான சொற்களும்
வேதத்தை ஓதுதலும்
**வாக்கினால் செயும்தவம்**
என்றுநீ அறிவாயே

மனதின் அமைதியும்
இயல்பான மௌனமும்
தெளிவும் முழுஅன்பும்
தூய்மையும் அடக்கமும்
**மனதால் செயும்தவம்**
என்றுநீ அறிவாயே;

# ஞானச்சிதறல்

செயல்பலனை விரும்பாது
யோகத்திலே நிலைநின்று
மேலாமுயர் உறுதியோடு
மனிதர்களால் செயப்படும்
**மூவிதத் தவங்களும்**
**சாத்வீகம்** எனப்படும்

மரியாதை பகட்டிற்காக
நிலையற்ற உறுதியற்ற
உபசாரமாய் செயப்படும்
**அத்தவம் ராஜஸமாம்**

மூடக்கொள்கை பற்றுதல்
துன்புறுத்தல் அழித்தல்
என்றேசெயும் **அத்தவம்**
**தாமஸமென** அறிவாயே;

நல்இடம் நல்தருணம்
பகிர்ந்து அளிப்பது
தன்கடமை என்று
இவைதமை உணர்ந்து
பலன்கருதாமல் செயும்
**அத்தானம் சத்துவமாம்**

# ஞானச்சிதறல்

பிரதிபலன் எதிர்பார்த்து
புலன்மனம் வருந்தியே
எத்தானம் தரப்படுமோ
**அத்தானம் ராஜஸமாம்**

தன்கடமை தவறியும்
காலஇடம் தவறியும்
கர்வமுடன் பூஜையின்றி
இகழ்ச்சியுடன் தரப்படும்
**அத்தானம் தாமஸமென்று**
அறிவாய்நீ அர்ஜுனா!

**‘ஓம்தத்ஸத்’** எனுமிதை
ப்ரம்மமாய் அறிவாயே
வேள்வியும் அந்தணரும்
ஆதியில் தோன்றினரே

**‘ஓம்’**என்று உச்சரித்து
ஓதியே துவங்குவர்
வேதத்தில் விதித்துள்ள
வேள்விதான தவத்தையே,

**‘தத்’**என்று விளம்பியே
பலன்கருதி செய்யார்
முக்தியை விரும்புவோர்
வேள்விதான தவத்தையே,

**‘ஸத்’**எனும் இவ்வேதச்சொல்
உண்மை நன்மைகளெனும்
அர்த்தத்தில் சொல்லப்படும்
அவ்விதமே அர்ஜுனா!
மங்கலச் செயலிலும்
பயனுறுதே இச்சொல்.

வேள்விதான தவத்தில்
**நிலைநிற்றல் ‘ஸத்’ ஆகும்**
அதற்காய் செயப்படும்
**செயல்களும் ‘ஸத்’ ஆகும்.**

சிரத்தையற்றுச் செய்யும்
வேள்விதான தவமும்,
பிறசெயல் அனைத்தும்
**‘அஸத்’தாய் சொலப்படும்**

இவைகளால் பயனில்லை
இம்மைக்கும் மறுமைக்கும்
**அஸத்தை விலக்கிடு!**
**ஸத்தாய் இருந்திடு!**

**ஓம்–தத்–ஸத்**

ஓம்

“மூவிதநம்பிக்கையைப் பகுத்தறிதல்”
எனும் இப்பதினேழாம் அத்தியாயம் முற்றிற்று.

## 18-ம் அத்தியாயம்

## "மோக்ஷஸந்யாச யோகம்"
## "முக்தித்துறவு"

கேசியை அழித்தவரே
தியாகம், சன்யாசமிதன்-
பொருளை தனித்தனியே
அறியஅவா கேசவா!

கர்மத்தில் கரைகண்ட
கீதையின் ஆசாரியன்
அர்ஜுனன் வினாவுக்கு
இவ்விதம் பகர்ந்தாரே

ஆசைகளே காரணம்
செயல்கள் தோன்றிட
அவைதமை துறத்தல்
சன்னியாசம் என்பரே,

பாரினில் இதையறிந்த
ஞானிகள் செயல்பலனை
துறத்தலை தியாகமெனப்
பகர்வரே பாரதா!

# ஞானச்சிதறல்

செயல்களெலாம் தோஷம்
விலக்கவேண்டும் அவைதமை
என்றுசிலர் பகர்வர்,
வேள்விதான தவங்கள்
இச்செயல் தவிர்த்தலை
தவறென்பரே சிலர்.

தியாகமோ மூவிதம்
நிச்சயித்து கூறுகேன்
வேள்விதான தவங்கள்
இயற்றப்பட வேண்டும்
விவேகிக்கு மனத்தூய்மை
அளிக்குமே அவைகள்,

பார்த்தனே! பற்றுவிட்டு
பலனைத் துறந்திட்டு
செயல்களைச் செய்திடு
இதுவேஎன் தீர்மானம்.

நித்தியகர்மம் பலன்தரா
விட்டாலோ பாவம்வரும்
தெளிவில்லாமல் செயப்படும்
**அத்தியாகம் தாமஸம்**

# ஞானச்சிதறல்

பயத்தால் செயலை
தியாகம் செய்தால்
பலனை அடையான்
**அத்தியாகம் ராஜஸம்**

நித்தியச் செயல்களை
பற்றையும் பலனையும்
துறந்து செய்தால்
**அத்தியாகம் சாத்வீகம்.**

மேலோங்கிய சத்துவகுணம்
இன்பதுன்ப செயலில்
விருப்புவெறுப்பு இல்லையோ
சந்தேகமிலா தியாகியாம்

உடலில் அபிமானம்
உள்ளவன் செயல்களைத்
துறத்தல் என்பதோ
என்றுமே இயலாது

செயல்பலனைத் துறப்பவன்
என்றுமவன் தியாகியாம்
நல்லது,தீயது கலந்ததென
மூவிதமாம் செயற்பலன்

# ஞானச்சிதறல்

தியாகம் செய்யாதோனுக்கு
செயற்பலன் என்றுமில்லை,
துறந்த துறவிக்கும்
செயற்பலன் என்றுமில்லை.

உடல்வாக்கு மனதால்
நேர்மைமாய் விபரீதமாய்
செய்திடும் செயலெலாம்
சாங்கிய தத்துவத்தில்
ஐவிதமான கரணம்
அவசியம் என்கிறதே
அவைதமை அறிவாய்
என்னிடத்தில் இருந்தே.

ஆதாரம், செய்பவன்,
பலவிதப் புலன்கள்,
பலப்பலச் செயல்கள்,
தெய்வமென ஐந்தாம்.

செயலற்ற ஆத்மாவை
செய்பவனாய் அறிபவன்
தெளிவற்ற அறிவுடையோன்
அஜ்ஞானத்தால் அறிவதில்லை,

ஸ்ரீமத் பகவத்கீதை – அத்:18

# ஞானச்சிதறல்

குணங்களின் பேதத்தால்
சாங்கியம் சொல்கிறதே
அறிவையும் செயலையும்
செய்பவனையும் மூவிதமாய்.

மாறாமலும் அழியாமலும்
வெவ்வேறான வஸ்துக்கள்
அனைத்திலும் ஒன்றாயுள்ள
சொரூபத்தை **அறியுமறிவு**
**எதுவோஅது சாத்வீகம்,**

எவ்வறிவு உடலுறையும்
எல்லாவித உயிர்களையும்
பலப்பலவாய் ஜீவர்களை
வெவ்வேறாய் **அறியுமறிவு**
**எதுவோஅது ராஜஸம்,**

பல்விதமான ஜீவர்களாய்
உண்மைதனை அறியாமலே
உடலையே எல்லாமாய்
திடமாய் பற்றுடன்
அல்பமாய் **அறியுமறிவு**
**எதுவோஅது தாமஸம்.**

# ஞானச்சிதறல்

நித்தியச் செயல்களை
விருப்பு வெறுப்பின்றி
பலனிலே பற்றின்றி
**செயும்செயல் அதுசாத்வீகம்,**

செயலாசை வயப்பட்டு
அகங்காரம் உடையவனாய்
அதிமுயற்சி யுடன்கூடி
**செயும்செயல் அதுராஜஸம்,**

பலனையும் இழப்பையும்
பிறர்படும் துன்பத்தையும்
யோசியாமல் மயக்கத்தால்
**செயும்செயல் அதுதாமஸம்.**

பற்றும் அகங்காரமும்
நான்எனதை விட்டவன்
உற்சாகம் உறுதியும்
உள்ளத்திலே உள்ளவன்
வெற்றிதோல்வி சமமாய்
கருதுமவன் **சாத்வீகன்,**

# ஞானச்சிதறல்

பேராசையும் செயல்பலனும்
துன்புறுத்தும் எண்ணமுடையோன்
தூய்மையில்லா மனமுடையோன்
அறிவாயவன் **ராஜஸீகன்,**

பண்படா அறிவுளோன்
வணக்கமில்லா வஞ்சகன்
சோம்பலுடன் காலத்தைப்
போக்குபவன் **தாமஸீகன்.**

கர்மமுக்தி, பயமபயம்,
கார்யகாரண, பந்தமோக்ஷம்
**அறியும்புத்தியே சாத்வீகம்,**
தர்மங்கள் அதர்மங்கள்
செய்தலும் தவிர்த்தலும்
**அறியாபுத்தி ராஜஸீகம்.**

அறியாமையால் அதர்மத்தை
தர்மமென எண்ணியே
அனைத்தையும் வேறாய்
**அறியும்புத்தி தாமஸீகம்.**

ஸ்ரீமத் பகவத்கீதை – அத்:18

# ஞானச்சிதறல்

ஒருநிலையாம் மனவுறுதியால்
பிராணப்புலன் செயல்களைத்
**தாங்குமுறுதி சாத்வீகம்,**
பற்றினால் பலன்வேண்டி
ஆசைபொருள் இவையனைத்தும்
**தாங்குமுறுதி ராஜஸமாம்,**

துர்புத்தி உடையவன்
துயரமும் பயதுக்கமும்
கவலையும் கர்வமும்
**தாங்குமுறுதி தாமஸமாம்.**

மூவிதசுகம் அறிவாய்நீ
பயிற்சியால் சந்தோஷம்
துக்கத்தின் முடிவையும்
துவக்கத்தில் விஷமென்றும்,
இறுதியில் அமிர்தமென்றும்
மாறாதஆத்ம சொரூபத்தின்
அறிவினுடை தெளிவினால்
**தோன்றும்சுகம் அதுசாத்வீகம்.**

புலன்களின் சேர்க்கையால்
ஆரம்பத்தில் அமிர்தமாம்
முடிவிலே விஷமாம்
**அந்தசுகம் அதுராஜஸம்,**

# ஞானச்சிதறல்

முதலிலும் முடிவிலும்
துக்கமயக்க சோம்பலையும்
கவனமின்மையும் கொடுக்கும்
**அந்தசுகம் அதுதாமஸம்.**

முக்குணமே மாயையாம்
துறத்தலே முக்தியாம்
அம்முக்தி அடைந்தோருக்கு
சுவர்கமில்லை புவியுமில்லை.

சுபாவத்தில் உதிப்பவை
முக்குணங்கள் அர்ஜுனா!
அவைகளுக் கேற்பவே
நால்வருக்கும் செயல்கள்,

நல்லறிவும் அனுபவமும்
வேதத்திலே நம்பிக்கையும்
தூய்மைபொறுமை அமைதியும்
**அந்தணர்கள் சுபாவம்,**

துணிவுதைர்ய சாதுர்யம்
போரினின்று விலகாமை
கொடையாட்சிமைத் தன்மை
**க்ஷத்திரியர்கள் சுபாவம்,**

உழவுசெய்தல் ஆவைக்காத்தல்
வணிகத்தொழில் **வைஶ்யசுபாவம்,**
அனைவருக்கும் உதவுதல்
**நான்காம்வர்ணர் சுபாவம்.**

ஸ்ரீமத் பகவத்கீதை – அத்:18

# ஞானச்சிதறல்

முக்குணத்தோஷம் கூடியதாய்
செயல்களெலாம் இருப்பினும்
அவைதவிர்த்தல் தகாது
பற்றுகளை விலக்கியோன்
செயல்களைத் துறந்தோன்
மனதைவென்ற புத்தியோன்
செயல்களின் துறவுநிலை
அடைவானே அர்ஜுனா!

இப்பிரம்மமாய்த் தனையுணர்ந்த
ஞானியானவன் சமமாயும்
இருமையிலும் அமைதியாய்
அடைகின்றான் உயர்பக்தியை,

நான்யாவன் எத்தன்மையன்
என்றறிந்த அச்சமயம்
என்னிடம் புகுகின்றான்
நானாக இருகின்றான்.

கவனமாய் கேட்டிடுவாய்
சொல்லியபடி செய்திடுவாய்
அவ்விதமின்றியே அர்ஜுனா!
அஹங்காரத்தால் தவிர்த்திடில்
அனைத்தையும் இழப்பாய்
நிச்சயமாய் அழிந்திடுவாய்,

# ஞானச்சிதறல்

நான்இப்போரைத் தவிர்ப்பேன்
எனில்இப்புத்தியும் பொய்யாமே
உனைஇயல்பாய் ஈடுபடசெய்யும்
உன்மனம் செயலிலென்றும்,

ஈஶ்வரர்அனைத்து உயிர்களையும்
இயந்திரத்தில் ஏற்றியவஸ்துபோல்
மாயையிலேஉழலச் செய்கிறாரே
அனைத்துயிரிலும் வசிக்கிறாரே!

**அவ்வீஶ்வரரை சரணடைவாய்**
உயர்பதமும் உயரமைதியும்
அவரருளால் அடைந்திடுவாயே
இவ்விதமாய் மறைபொருளின்
மேலாம்ஞானத்தைப் பகர்ந்தேனுனக்கு
ரகசியமிது ஆனால்உயர்ந்தது
முழுமையாய் அருளினேன்நான்
விருப்பம்போல் செய்வாயே!

எனக்குமிக ப்ரியன்நீ
எனதினிய நண்பனும்நீ
என்னுடை பக்தன்நீ
என்னையே பூஜிப்பாய்நீ
என்னையே அடைவாய்நீ
என்உறுதி இதுசத்தியம்.

# ஞானச்சிதறல்

எல்லாவித தர்மத்தையும்
நன்றாகத் துறந்துவிட்டு
என்னிடம் சரண்புகுவாய்
பாவங்கள் அனைத்தினின்றும்
விடுவிப்பேன் உனைஅர்ஜுனா!
முக்தியும் அளிப்பேன்நான்.

பக்திதவம் தொண்டில்லா
பாவம்பழி இகழ்ச்சி
செய்திடும் அவனுக்கு
விளங்காது இஞ்ஞானம்,

பண்புபக்தி மிக்கோனுக்கு,
பகிர்ந்தாலோ பக்திமிகும்,
பயன்தரும் ஐயமின்றி,
பெறுவானே எனையென்றும்.

இத்தர்மம் இவ்வாதம்
பூரணமாம் நம்வாதம்
கற்றறிந்து தெளிந்தோன்
ஞானமெனும் வேள்வியாலே
ஆராதிப்பான் எனையென்றும்
இதுவேஎன் தீர்மானம்!

ஸ்ரீமத் பகவத்கீதை – அத்:18

# ஞானச்சிதறல்

நிலைமாறா மனதுடனே
இவ்வுபதேசம் நன்குன்னால்
பெறப்பட்டதா பார்த்தனே!
அறியாமையாலே தோன்றிய
பெருமயக்கம் அழிந்ததா?
வினவினான் அச்சுதன்!

**அர்ஜுனன் புகன்றான்**
அழிந்தது மயக்கமெலாம்
அனந்தனே! உன்னருளாலே
அறிந்தேனே உண்மைநிலையை
அறுதியிட்டுக் கூறுவேனே.

அனைத்துவித சந்தேகமும்
அகன்றதுகாண் அச்சுதனே!
அப்படியேஉன் வாக்கினைநான்
அன்புடன்செய் வேனேகேசவா!

**ஸஞ்ஜயன் புகன்றான்**
யோகேஶ்வரர் தன்வாயால்
விளம்பியதைக் கேட்டேன்
வியப்பானஇவ் வுபதேசம்
வியாசரருளால் பெற்றேனே.

கிருஷ்ணன்சொல் காதிலொலிக்க
இப்புண்ணியம் பெற்றவனானேன்
மீண்டும்மீண்டும் இதைநினைந்து
மகிழ்ச்சியில் திளைக்கின்றேனே

# ஞானச்சிதறல்

**ஸ்ரீஹரியின் திருஉருவைமீண்டும்**
**நினைந்துநினைந்து வியக்கின்றேனே!**

**எங்குயோகேஶ்வரக் கண்ணனும்**
**வில்லேந்திய விஜயனும்**
**உள்ளனரோ அவ்விடத்தில்**
**வளமான செல்வமும்**
**வெற்றியும் நீதியும்**
**நிலைத்து நிற்கும்**
**என்பதென் கருத்தாம்**
**என்பதென் கருத்தாமே!**

"முக்தித்துறவு"
எனும் இப்பதினெட்டாம் அத்தியாயம் முற்றிற்று.

**சர்வம் ஸ்ரீகிருஷ்ணார்ப்பணமஸ்து**
**சர்வம் பிரம்மார்ப்பணமஸ்து.**
**ஓம் தத் ஸத்**

# நூலாசிரியர்



**ஆச்சார்யர்**

உலக சின்மய மிஷன் ஸ்தாபகர் குருதேவர் ஸ்வாமிசின்மயநந்தரின் தமிழ் சாந்தீபநீ சாதனாலய –வேதாந்த குருகுலத்தால் ஈர்க்கப்பட்டு, சின்மய மிஷன் தமிழில் நிகழ்த்தும் ஆன்மீக குருகுலப் பயிற்சியில் 1991-ல் சேர்ந்து, ஆச்சார்யர், தவத்திரு ஸ்வாமி வாகீஶானந்த ஸரஸ்வதி அவர்களுடனிருந்து மூன்று ஆண்டுகள் வேதாந்த சாஶ்த்திரங்களை முறைப்படிப் பயின்றார்.

இவ்வான்மீகப் பயிற்சியின் நிறைவில், 1993-ல் பிரம்மச்சாரி தீட்சை பெற்று, 2002 வரை சின்மய மிஷன், சிறுவாணி, கோயம்புத்தூர் கிளையில் சேவை செய்து வந்தார். பின்னர் 2020 வரை சேலம், ஹோசூர் ஆகிய சின்மய மையங்களின் ஆச்சார்யராக இருந்தார்.

ஸ்ரீமத் பகவத்கீதையின் 18 அத்தியாயங்களையும் விரிவாக **ஸ்ரவண சாதனை** என்ற முறையில் மூன்று முறை நிகழ்த்தியுள்ளார்.

ஸ்ரீமத் பகவத்கீதை, உபநிஷத்துகள், கைவல்யநவநீதம், திருவாசகம், வேதாந்த மற்றும் பக்தி நூல்களின் கருத்துக்களை ஆன்மீக சாதகர்களுக்கு விளக்கி இந்தியாவின் பல பகுதிகள், மற்றும் ஸ்ரீலங்கா ஆகிய இடங்களில் இதுகாறும் **150 -க்கும் மேற்பட்ட ஞான வேள்விகள்**, **ஆன்மீக முகாம்கள்,** மற்றும் **சாதனை** வகுப்புகளை நிகழ்த்தியுள்ளார்.

**பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் C-VEP (C**hinmaya **V**aluebased **E**ducation **P**rogramme**)** என்ற மாணவ, மாணவிகளுக்கான குணங்களுடன் கூடிய ஆளுமைப் பண்புகளை விதைக்கும் வகுப்புகளை **I.**ராமாயணம்-Value vs Values; **II.**பாகவதம்-Young Leaders & Perfect Leader**; III.**ஹனுமான் சாலிசா-Personality Development; மற்றும் **IV.**விபீஷண கீதை–Key to Success ஆகிய நூல்களின் துணைகொண்டு **நிகழ்த்தி** வந்தார்.

**மேலும் பெருநிறுவனங்களில்** [Corporate Companies] workshop, seminar like **P-Cube** [Potential–Performance–Perfect], 4-A [Aim–Analyse–Act-Achieve] போன்ற பண்புகள், நிர்வாக ,ஆளுமைத்திறன் வகுப்புகளை நிகழ்த்திவந்தார் .

இவர் ஆழ்ந்த கருத்துக்களையும் மிக எளிமையாகவும், நகைச்சுவை உணர்வுடனும், அன்றாட வாழ்வியல் உதாரணங்களின் மூலம் விளக்கிக் கூறும் திறன் படைத்தவர்.

இப்படிப்பட்ட இவர் உள்ளத்தின் உந்துதலால் உலகிற்கு உதவும் பொருட்டு, ஸ்ரீமத் பகவத்கீதை ஶ்லோகங்களின் சாரத்தை அளிக்கும் தமிழ்ப் பாடல்களாய் இயற்றியுள்ளார். இது நூலாய் வெளிவருவது அனைவருக்கும் நற்பயனை நல்கும் என்பது திண்ணம். கீதையின் ஸம்ஸ்கிருத ஶ்லோகங்களை படித்துப் பயில இயலாவிடினும், தமிழ்ப்பாடல்களைப் படித்தும், பயின்றும் முழுப்பலனையும் பெறுவோமாக.

**ஸ்ரீமத் பகவத்கீதை ஶ்லோகங்களின் சாரத்தைத் தமிழ்ப்பாடல்களாய் இயற்றிவர்:**

**ஆச்சார்ய**

**ஸ்வாமி கிருஷ்ணாத்மாநந்த ஸரஸ்வதி**

**ஹரி: ஓம்!**